Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாசி 22 [08-10-1993] வெள்ளிக்கிழமை ஓசை 232

## குடும்ப அட்டை அலுவலகம் திங்களன்று திறக்கப்படும்

பொதுமக்களின் வசதிகருதி யாழ். மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய கோட்டங்களுக்கான குடும்பஅட்டை பதிவு அலுவலகங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளன. வலிகாமம் கோட்டத்தில் கோண்டாவில் புகையிரதநிலையவீதியிலும், வடமராட்சியில் மாலிசந்தி அலுவலர்களுக்கான அனுமதி வழங்கும் செயலகத்திலும், தென்மராட்சியில் சாவகச்சேரி அவசர அனுமதி வழங்கும் செயலகத்திலும் இயங்கும். இது தொடர்பான முழு விபரங்களும் 6ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளன.

# கருணாநிதி குற்றச்சாட்டு குறித்து விடுதலைப்புலிகள் ஆழ்ந்த கவலை!

## அபாண்டமானதென தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னைக் கொல்வதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் அதன் மூலம் திரு. கோபாலசாமியை கழ்சித் தலைவராக்க முயற்சிப்பதாகவும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எமது இயக்கம் மீது ஓர் அபாண்டமான குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார். இது எமக்கு அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும், ஆழ்ந்த வேதனையையும் தருகிறது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது**

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் நாட்டு அரசியல் உலகில், நீண்டகாலமாகவே விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரதான பகடைக் காயாக வைத்து அரசியல் சதுரங்க ஆட்டம் நடைபெறுவதும், அரசியல் கட்சிகள் தமது சுயநல அரசியல் அபிலாசைகளுக்காகவும், அதிகாரப் போட்டிகளுக்காகவும் புலிகள் இயக்கத்தை மிகவும் கேவலமாக கொச்சைப்படுத்தி வருவதும் சகலரும் அறிந்த விடயமே. இந்தக் கேலிக்கூத்தான அரசியல் நாடக அரங்கில் கலைஞர் கருணாநிதி அவர்களும் மேடையேறியிருப்பது எமக்கு ஒரு புறம் வியப்பையும் மறுபுறம் கவலையையும் தருகிறது.

அன்று தொட்டு இன்று வரை, எமது விடுதலை இயக்கம் இந்திய அரசியல் முரண்பாட்டுக் களத்தில் காலை வைக்காது, கட்சி சார்பற்ற நடுநிலையைப் பேணிவருகிறது. நியாயமான எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பரந்து பட்ட இந்திய வெகுசனங்களின் குறிப்பாக தமிழ்நாட்டு மக்களின்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை தாக்குதலில் 2 மீனவர் பலி; 4 பேர் காயம்

### வடமராட்சி கிழக்கில் சம்பவம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதிக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் நேற்று காலை 5.30 மணியளவில் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் போது இரு மீனவர்கள் பலியானதுடன் நால்வர் காயமடைந்தனர். பல ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் நாசமாக்கப்பட்டன.

இரு விசைப்படகுகளில் வந்த சிறிலங்கா கடற்படையினரே நேற்றுக் காலை குடாப் பரப்பிற்கும் நாகர் கோவிலுக்கும் இடையேயுள்ள

(10ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார்சைக்கிளில் சென்ற இராணுவம் மீது புலிகள் தாக்குதல்

### ஒருவர் பலி; ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டுமோட்டார் சைக்கிள்களில் சென்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஓர் இராணுவத்தினர் கொல்லப்பட்டார். அவரிடமிருந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கடந்த புதன்கிழமையன்று 78ஆம் கிராம முகாமிலிருந்து கோப்பாவெளி இராணுவ முகாமிற்கு சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர்மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இவர்களிடமிருந்து ரி56-2 ரக துப்பாக்கி-01, ரவைக்கூடு -01, ஐ. எம். ரவைகள்- 30 என்பன கைப்பற்றப்பட்டன.

## புலிகளின் போக்குவரத்தை கட்டுப்படுத்தும் முயற்சி தோல்வி

### பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு

கிளாலிப் பகுதியில் நடத்திய தாக்குதலை நிறுத்தி விட்டு இராணுவம் திரும்பியிருப்பதை கொழும்புச் செய்தித்தாள்கள் குறை கூறியுள்ளன.

போராளிகள் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு மேற்கொண்ட ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் இது என்று பாதுகாப்பு வட்டாரத்தினர் கூறியுள்ளனர்.

மேலும் சிறிலங்கா இராணுவம் புலிகளின் போக்குவரத்தைத் தடைசெய்யும் நோக்கத்துடன் நடத்திய தாக்குதல் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியைத் தரவில்லை என்றும் புலிகள் பல படகுகளைத் தாக்குதலில் இருந்து காப்பாற்றிவிட்டனர் என்றும் அதே வட்டாரங்கள் கூறுகின்றன,

## புலிகளின் கண்ணி வெடிக்கு சிப்பாய் பலி; 6 பேர் காயம்

### மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் புலிகளின் கண்ணி வெடியில் இராணுவ வாகனமொன்று சிக்கி சிதறியதால் ஓர் இராணுவச் சிப்பாய் பலியானார். மேலும் ஆறு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த இராணுவத்தினர் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

## மிதிவெடியில் சிக்கிய உழவு இயந்திரம் சேதம்

(தென்மராட்சி)

கிளாலி கடற்கரையில் சிறிலங்கா இராணுவத்தால் வைக்கப்பட்ட மிதிவெடியொன்றில் உழவு இயந்திரம் சிக்கியதால் அதில் பயணம் செய்தவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். உழவு இயந்திரத்தின் முற்பகுதி சேதமடைந்தது.

நேற்று காலை 10.00 மணிக்கு அப்பகுதியில் பொருள்களை ஏற்றச்சென்ற உழவு இயந்திரமே இவ்வாறு சேதமடைந்தது. இதே வேளை துவிச்சக்கரவண்டியொன்றும் சேதமடைந்ததாகத் தெரியவருகிறது. (86)

## கப்பல் கட்டணமின்றி மண்ணெய் பெற்றுத் தருக

### கூட்டுறவுச் சங்கங்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கப்பல் கட்டணம் இன்றி மண்ணெண்ணெய் கொள்வனவு செய்து தரும்படி பலநோக்கு கூ. சங்கங்கள் யாழ். அரச அதிபரைக் கேட்டுக் கொண்டுள்ளன.

நேற்று யாழ். அரச அதிபரைச் சந்தித்த பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் சார்பிலான தூதுக் குழுவொன்று இதற்கான தீர்மானக் கடிதத்தை அவரிடம் ஒப்படைத்துள்ளது.

மேற்படி தீர்மானம் பற்றித் தெரியவருவதாவது; நேற்று யாழ். கூட்டுறவுச் சபை மண்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 2ஆம் லெப். மாலதி உருவப்படம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதற் களப்பலியான பெண்புலி 2ஆம் லெப். மாலதியின் உருவப்படம் நாளைய ஈழநாதத்துடன் இணைக்கப்படும்.

## சிற்றூழியர் நேர்முகப்பரீட்சை நாளை சமுகம் தரலாம்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாணக்கல்வியமைச்சினால் நடாத்தப்படும் சிற்றூழியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு இதுவரை கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள்நாளை காலை 9மணிக்குயாழ் கல்வித்திணைக்களத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கடுக் கொள்ளப்படுகின்றனர்.

இவர்கள் வரும்போது தாங்கள் விண்ணப்பித்தமைக்கான ஆதாரத்துடனும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான ஆவணங்களுடனும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி நேர்முகப்பரீட்சைகள் கடந்த மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் யாழ். கல்வித்திணைக்களம் மற்றும் மருதனாமடம், பருத்தித்துறை ஆகிய கோட்டக் கல்வி அலுவலகங்களிலும், நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## 'சுதந்திரப் பறவைகள்' ஏடு நாளை வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினரின் அதிகாரபூர்வ ஏடான 'சுதந்திரப்பறவைகள்' ஐப்பசி மாத இதழ் நாளை வெளிவரவுள்ளது.

தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் முதற் களப்பலியான பெண்புலி 2 ஆம் லெப். மாலதியின் சிறப்பிதழாக வெளிவரும் இப்பத்திரிகையின் ''முன்னேறிய இராணுவத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டது- புலோப்பளைச் சமரில் மகளிர் படையணி என்ற தலைப்புச் 'செய்தியையும்'' இச்சமரில் வீரச்சாவடைந்த பெண் புலிகளின் உருவப்படங்களையும் மற்றும் பல அம்சங்களையும் தாங்கி வருகிறது.

## வரி விளம்பரம்

**O L PAPER CLASSES**

O/L விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களுக்கான துரித மீட்டலும், வினா விடை வகுப்புகளும் நடைபெறுகின்றன. சம்றொக் அக்கடமி, யாழ் சுண்டுக்குளி. 6237

**ஆங்கில வகுப்புகள்**

விசேட ஆங்கில வகுப்புகளும் (SPOKEN WITH GRAMMAR) ஆண்டு 10, 11 க்குரிய வகுப்புக்களும் நடைபெறுகின்றன. சம்றொக் அக்கடமி, யாழ். சுண்டுக்குளி. 6236

**வித்தியாரம்பம் மரநடுகை**

வித்தியாரம்பத்திற்கு ஏடுகள், மரநடுகைக்கு மரக்கன்றுகள் தருகிறோம். மரக்கன்றுகள் பதிக்க அவசியமான வெற்றுப் பொலிமா பக்கெற்றுக்கள் தந்துதவுங்கள். 'மில்க்வைற்' சி/ 7557

**ஆண்டு 4 பரீட்சை**

1994 ஆகஸ்ட் புலமைப் பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பி.ப. 3 மணிக்கு நடைபெறும் தொடர் பரீட்சையின் 12-வது பரீட்சை 9-10-93 சனிக்கிழமை நடைபெறும். வினாத்தாள் பெற்றுக்கொள்ளலாம். எடிசன் அக்கடமி, யாழ் இந்து அருகில் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6233

**மகாதேவா ஜோதிடம்**

உங்கள் உறுதியான பலன்களை அறியவும் 239, ஆஸ்பத்திரி வீதி (சத்திரச்சந்தி) யாழ்ப்பாணம். காலை 10.00 -1.00 மணி வரையிலும் 140 செல்லர் வீதி-நல்லூர் பி.பகல் 3.00 6.00சந்திக்கலாம் (6240)

**12-10-93இல்**

**வியாழ மாற்றம்**

15.10 93-சனிவக்கிரமாற்றம் 31-10 93 செவ்வாய் மாற்றம் ரூ 10/-- ஸ்ரீவாலாம்பிகா புத்தகசாலை பன்றிக்கோட்டுப் பிள்ளையார்கோவில் முன்பாக கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம். (நூலாசிரியர்-சத்யா) (6238)

**இலக்கியக்களத்தில் "சுவடுகள"**

1991ஆம், 1992ஆம் ஆண்டுகளில் வெளிவந்த நாவல்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட நாவல். இயல்வாணன் எழுதிய "சுவடுகள்". இந்த நாவலில்... மௌனங்களைப் பிளந்து ஒருவார்த்தை வெடிக்கிறது. இருளைக்கிழித்து ஒரு விடியல் பிறக்கிறது.. சூரியனைத்தேடி ஒரு சுதந்திரப் பூ மலர்கிறது.... (6144)

## விசாரணைக்குழு அமைக்கும் செய்தியில் குழப்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையில் நடைபெற்ற இலங்கையில் காணாமற்போனவர்கள் தொடர்பான பேச்சுகளில் குழப்பம் நிலவுவதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

செய்தியாளர் மாநாட்டில் ஐரோப்பிய பாராளுமன்ற குழுவினர் 1991க்குமுன் இலங்கையில் காணாமற்போன ஆயிரக்கணக்கானவர் குறித்து ஆராய அரசு நடவடிக்கைக் குழு ஒன்று அமைக்கப்படும் என ஜனாதிபதிவிஜேதுங்க தம்மிடம் கூறியதாக குறிப்பிட்டனர். ஆனால் ஜனாதிபதி அலுவலகம் இக் கூற்றை இப்போது மறுத்துள்ளது.

இதைஜனாதிபதியின்பேச்சாளர் ஒருவரும் மறுத்துள்ளார். 1991க்கு முன் எத்தனைபேர் காணாமற் போயுள்ளனர் என மதிப்பிடவென்றே பாதுகாப்பு அமைச்சில் ஒரு பிரிவு உள்ளது என்று அவர் கூறியுள்ளதாகவும் பி. பீ. ஸி. தெரிவித்தது. மனித உரிமைகள் இது குறித்து ஆராய சுதந்திரமான தனிக்குழு ஒன்றையே அமைக்குமாறு கூறிவந்ததென சுட்டிக்காட்டிய பி.பி. ஸி. இலங்கையின் எதிர்கால கொள்கை குறித்து இங்கு வரும் வெளிநாட்டுக் குழுக்கள் வெளிப்படையான நம்பிக்கையுடன் திரும்புவது இல்லை என்பது இது முதன் முறையல்ல எனக் குறிப்பிட்டது.

### கடதாசி ஆலை ஊழியர்

## நிரந்தர நியமனம் கோரி அடையாள வேலை நிறுத்தம்

(வாழைச்சேனை)

தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் வாழைச்சேனை காகித ஆலை அமய ஊழியர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறுகோரி திங்களன்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை காகித ஆலையில் சுமார் 105 ஊழியர்கள் அமய ஊழியர்களாக கடமையாற்றி வருகின்றனர்.

பத்து வருடங்களாக கடமையாற்றிவரும் தங்களுக்கு நிரந்தர நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை என அமைய ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

நிரந்தர நியமனத்திற்காக இவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்ற போதிலும் இவர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை.

தாங்கள் வேலை இழக்க வேண்டிவரும் என்ற அச்சம் இந்த ஊழியர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

'எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் அவ்வாறு அல்லாதுபோனால்தாங்கள் வேலை இழக்கும் காலத்தில் தமக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்என அவர்கள் கோரியே அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து மேற்படி நிர்வாகத்தினர் இந்த ஊழியர்களுடன் பேச்சு நடத்த முன்வந்துள்ளனர்.

## மகாப்பொல கொடுப்பனவு

முதலாம் வருட மாணவர்களுக்கான 4ஆம் தவணைப் பணமும், ஏனைய வருட மாணவர்களுக்கான 9ஆம் தவணைப்பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில்அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவுகளுக்கான நேர சூசிகை பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன.

பதிவாளர்,

(சி-7564)

## நுளம்பை அகற்றும் நறும்புகை

இயற்கை அன்னையின் தாவரவுலகில் மருத்துவப் பயன் தரும் வேம்பு அற்புதமானது. அதன் முத்தான விதைகளின் ஆதாரமும் கலந்ததே 'நீம்' சுகாதார தூபம். எவ்வித எதிர்விளைவும் தராததும், மங்கலகரமானதும். நீம் சுகாதார தூபம், ஒரு பக்கற் விலை ரூ. 3/- மட்டுமே. 25 பக்கற்றுகள் கொண்ட ஒரு அட்டை ரூ. 60/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது.

"மில்க்வைற்"

(சி-7542)

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கலைமாணி | பகுதி I | B. A. | PART | I |
| ,, | பகுதி II | ,, | ,, | II |
| வணிகமாணி | பகுதி I | B. COM. | PART | I |
| ,, | ,, II | ,, | ,, | II |

**விரிவுரைகள் 10. 10. 1993-ல் ஆரம்பமாகின்றன.**

குறிப்பு: எக்காரணம் கொண்டும் விரிவுரைகளுக்கு ஆரம்பத்திலிருந்து சமுகமளிக்கத் தவறும் மாணவர்களுக்கு பின்னர் அனுமதி வழங்கப்படமாட்டாது.

வெளிவாரிப்பட்டப்படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ்நகரில் இதுவே.

கடந்த 15 வருட காலமாக அநேக பட்டதாரிகளை உருவாக்கிய நிறுவனம்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1 ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்

(சி-7567)

### யாழ் மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கம் நகைத் தொழிலாளர்களுக்கு விடுக்கும்

## அறிவித்தல்

அன்புடையீர்

மேற்படி சங்கம் கன்னாதிட்டி சந்தியில் மக்கள் வங்கிக்கு முன்பாக இயங்கி வருகிறது. யாழ் மாவட்ட நகைத் தொழிலாளர்கள் அனைவரும் மேற்படி காரியாலயத்தில் புதிய உறுப்பினர்களை பதிவு செய்து கொள்ளும்படியும், அங்கத்தவர்கள் அவ்வவ் மாதத்திற்கு உரிய சந்தாப்பணத்தை காரியாலயத்தில் செலுத்தி பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளும்படியும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

-தலைவர்

**யாழ் மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கம்**

பிரசுர அன்பளிப்பு:-

**கே. பீ. ஆபரணத் தொழிற்சாலை**
58, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்

(சி]7565)

## நினைவு கூருகின்றோம்...

**1993-10-08**

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - நாவற்குடாப் பகுதியில் சிறிலங்கா இரகசியப் பொலிசாரின் முற்றுகையின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

**ரமேஸ்/நாகலிங்கம்** (கணபதிப்பிள்ளை கனகலிங்கம் - நாவற்குடா - மட்டு)

அம்பாறை - அக்கரைப்பற்றில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் கொண்டவெட்டுவான் பகுதியில் வைத்து கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த -

❋ **எஸ்** (மா. நடராசா - காலி)

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

❋ **சரத்** (காளி வேலாயுதம் - பட்டித்திடல், மூதூர் - திருமலை)

1987ஆம் ஆண்டு கிளிநொச்சி - 10ஆம் வாய்க்கால் பகுதியில் தேச விரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2 ம்லெப். விக்கி** (பொன்னையாவரதராசா கல்விளான், துணுக்காய் மாங்குளம்)

1990ஆம் ஆண்டு விளைபூமிப் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த -

**ஜெயா (.......)**

தமிழீழக் கடற்பரப்பில் (திருக்கோயில்) தொழிலுக்குச் சென்றபோது சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கடற்றொழிலாளி,

மட்டு - கருவேப்பங்கேணிப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு உயிருடன் ரயர் போட்டு எரிக்கப்பட்ட 06 தமிழர்கள்,


கிளாலிக் கடற்பரப்பில் பயணம் செய்த பயணிகள் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பலியான 07 பொதுமக்கள்,

**ஆகியோரை இந் நாளில் நினைவு கூருகின்றோம்.**

❋ இக் குறியிட்டப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7561]



## வெலிங்டன் சந்திக்கருகில!

# UNIKCO COMPUTER CENTRE

Computer பயிற்சி நெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- BASIC Language (including Graphics Sound & Files)
- PASCAL Language (பல்கலைக்கழகம் செல்லவிருப்பவர்கட்கு மட்டும்)
- dBASE III PLUS and MS - DOS
- LOTUS 1 2-3 and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel. 5.5 and MS - DOS

வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம்: 10. 10. 93
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 11. 10. 93

Equipment Used: ACER, ARC Computers [IBM Compatibles]

மேலதிக விபரங்களுக்கு:

37, Clock Tower Road, Jaffna.

(சி-7562)

யாழ்ப்பாணம்

# கருத்துலகமும் வாழ்வியக்கமும்

இந்த உலகத்தைப் பல உலகங்களாக வகைப்படுத்திப் பார்க்கலாம். எல்லையற்ற பிரபஞ்சமாக வியாபித்து நிற்கும் பேருலகம், சூரிய மண்டலத்தில் சுற்றித்திரியும் பூவுலகம், பொருள்மயமாக காட்சி தரும் பொருளுலகம், மனித மூளைக்குள் செயற்படும் மனவுலகம், மனித உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகம், இப்படியாகப் பல உலகங்கள் உண்டு. இந்த வகையில் கருத்துலகம் என்ற ஒரு உலகமும் உண்டு.

கருத்துலகம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அது எப்படி இயங்குகிறது?

கருத்துலகம் என்றால் கருத்துக்களால் அமையப் பெற்ற உலகம். எண்ண உலகம். மனித சிந்தனைகள், நம்பிக்கைகள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள், வேதாந்தங்கள், தத்துவங்கள். இலக்கியங்கள் என்ற ரீதியில் கருத்துக்குவியல்களைக் கொண்ட உலகம். பல வகைப்பட்ட இந்த கருத்துருவங்களின் ஒட்டு மொத்தமான கட்டமைப்பையே இங்கு கருத்துலகம் என குறிப்பிடுகிறோம்.

கருத்துக்கள் என்றால் மனிதனின் மனவுலகக் குகைக்குள் வசிக்கும் அரூபமான நிழலுருவங்கள் அல்ல. அன்றி, அவை அனுபவத்திற்கு அகப்படாத பூடகமான மானசீகப் பொருட்களுமல்ல.

கருத்துகளுக்கு இருப்புண்டு. திண்ணியமான பொருளிய வாழ்வுண்டு. கருத்துக்கள் மனித பண்பாட்டு உலகிலிருந்து பிறப்பெடுத்து மனிதர்களைப் பற்றிக்கொள்கிறது.

அன்றொரு காலம், பல யுகங்களுக்கு முன்னர், இந்தப் பூமியில் ஒரு கருத்து பிறப்பு எடுத்தது. கருத்துக்களின் மையக் கருத்தாக அது புனிதம் பெற்றது. மேலாதிக்கம் எடுத்தது. மனிதனை அது ஆழமாகப் பற்றிக் கொண்டது.

அந்தக் கருத்துக்கு மனிதன் பொருள் வடிவம் கொடுத்தான். மலைகளைப் பெயர்த்து, கற்பாறைகளைத் தகர்த்து, கலைவடிவம் கொடுத்தான். ஆயிரமாயிரம் ஆலயங்கள் எழுந்தன.

அந்தக் கருத்திற்கு மனிதன் விளக்கங்கள் கொடுத்தான். வியாக்கியானங்கள் கொடுத்தான். வேதங்கள் தோன்றின. சித்தாந்தங்கள் பிறந்தன. கிரியைகள், சடங்குகள் தோன்றின. நிறுவனங்கள் பிறந்தன. நிர்வாக பீடங்கள் தோன்றின. கோடானு கோடி அடியார்கள் தோன்றினர். ஆராதனைகள் நடத்தினர்.

அந்த மையக் கருத்தில் எழுந்த கருத்துலகம் மனித குலத்தை ஆட்டிப் படைத்தது.

கருத்துலகிலிருந்தே தனி மனித மனம் உருவாக்கம் பெறுகிறது. கருத்துலகம் மனிதனை இயக்குகிறது. மனிதனின் சமூக செயற்பாடுகளிற்கு ஆதாரமாக இருக்கிறது. நாம் கருத்துலகால் வனையப்பட்ட சமூகப் பொம்மைகள்.

நாம் பிறந்த கணத்தில் இருந்தே கருத்துலகம் எம்மை விழுங்கிக்கொள்கிறது. நாம் பிறந்து விழிப்புணர்வு பெறுவதற்கு முன்னரே எமக்கு விலங்குகளை மாட்டி விடுகிறது. விபரமறியா பருவத்திலேயே எமது விதியை நிர்ணயித்து விடுகிறது. கண்திறக்காத சிசுவாக இந்தப் பூமியில் பிரசவித்த கணத்தில் இருந்து எமக்கு ஒரு பெயர் சூட்டி, எமக்கு ஒரு வம்சம் என்றும், சாதியென்றும், மதமென்றும், மரபு என்றும், சம்பிரதாயம் என்றும் கருத்துலகம் குத்தி விடும் சமூகக் குறிகள் சுடுகாடுவரை எம்மைப் பின்தொடர்கின்றன. நாம் வாழ்ந்த குடும்பம், நாம் படித்த பாடசாலை, நாம் வழிபட்ட கோயில், நாம் வாசித்த நூல்கள், நாம் பழகும் நண்பர்கள், நாம் வரித்துக் கொண்ட ஆசான்கள் என நாம் கொண்ட கருத்துறவுகளால் காலம் காலமாக எமது மூளையில் திணிக்கப்பட்ட எண்ணங்கள், நம்பிக்கைகள், சித்தாந்தங்கள், உலகப் பார்வைகளால் எமது மனமும் எமது சுயமும் தோற்றப்பாடு கொள்கின்றது. எம்மீது திணிக்கப்பட்டதும் எம்மை ஆகர்ஷித்துக் கொண்டதுமான கருத்துக்கள் எமக்கு உள்ளே இருப்புக் கொண்டு இயந்திரமாக எம்மை இயக்கிக் கொண்டிருக்கின்றன.

அந்தக் கருத்து ஆழமான நம்பிக்கையாக அவனை ஆட்கொண்டது. அத்தக் கோவில் விக்கிரகத்தின் முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து எழுகின்றான். பின்னர் பிரகாரத்தைச் சுற்றி பிரதட்சிணம் செய்து வருகிறான். நம்பிக்கை என்ற கருத்தியக்கம் அவனை இயக்கியது. அன்று காலை அரை மணி நேரமாக அந்த மத பண்பாட்டுச் சடங்குகளில் காலம் நழுவியது தெரியாதவாறு எண்ண இயந்திரம் அவனை இயக்கியது.

ஒருவனது நடத்தை, அவனது செயற்பாடு, அவன் நாளாந்தம் நடத்தும் வழிபாடுகள், மற்றவர்களுடன் சேர்ந்து அரங்கேற்றும் சம்பிரதாயச் சடங்குகள், உறவு முறைகள் - எல்லாமாக அவனது சமூக நடைமுறைச் செயற்பாடுகள் அனைத்தையுமே கருத்துலகம் நிர்ணயித்து விடுகிறது.

மனிதர்கள் தம்மை அடையாளம் காணவும், சமூகப் பிறவிகளாக தம்மை உருவாக்கிக் கொள்ளவும், மற்றவர்களுடன் உறவு கொண்டு பண்பாட்டு வாழ்வில் பங்கு கொள்ளவும் கருத்துலகம் வழி செய்து கொடுக்கிறது. இந்த வகையில் தனிமனித வாழ்விற்கும் சமூக சீவியத்திற்கும் கருத்துலகம் ஆதாரமாக இருக்கிறது.

கருத்துக்கள் சமூக உலகம் சார்ந்தவை. கருத்துலகமானது சமூக உலகத்தின் ஒரு உலகமாக, சமூகக் கட்டமைப்பின் ஒரு அமைப்பாக, மனித வாழ்வியக்கத்தை ஊடுருவி நிற்கிறது.

கருத்துலகத்தை சமூக உலகமே படைக்கிறது. சமூக நிறுவனங்களே கருத்துலகை உருவாக்கம் செய்கின்றன.

குடும்பம், பாடசாலை, பல்கலைக்கழகம், கோவில், கட்சி, தகவல் தொடர்பு ஸ்தாபனங்கள் என்ற ரீதியில் கருத்து உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. பேச்சாக, எழுத்தாக, பாடமாக போதனையாக, பிரசங்கமாக, பிரச்சாரமாக, செய்தியாக, தகவலாக, பல்வேறு வழிகளில், பல்வேறு வடிவங்களில் கருத்து உற்பத்தி நிகழ்கிறது. குழந்தைப் பருவத்தில் இருந்து வாலிபப் பராயம் வரை வீட்டிலும் பள்ளியிலுமாக நீண்ட நெடுங்காலம் ஒருவனுக்கு கருத்துத் திணிப்பு நடக்கிறது. அந்தக் கருத்துலக அழுத்தத்தில் அவனது ஆளுமை பிறந்து வளர்கிறது. மூளைக்குள் கொட்டப்பட்ட கருத்துகளின் தன்மையைப் பொறுத்ததாக அவனது சிந்தனையும், செயற்பாடும், சீவியமும் அமைந்துவிடுகிறது.

## பிரம்மஞானி

கருத்துக்களைப் படைத்து, அந்தக் கருத்துக்களை வெகுசன அரங்கில் பரப்பி, சமூகக் கருத்தோட்டத்தை கட்டி வளர்த்து, சமூக சிந்தனைப் போக்கை நெறிப்படுத்தி, சமூக கட்டுப்பாட்டை நிலை நாட்டுவதில் கருத்து உற்பத்தி நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. இந்த வகையில் மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, அவர்களை கட்டுப்பாட்டுடன் ஆளுவதற்கு கருத்துலகம் அவசியமானது என்பதால் உலகத்தில் உள்ள பல்வேறு அரசுகளும், ஆளும் வர்க்கங்களும் கருத்து உற்பத்தி நிறுவனங்களை தமது அதிகார கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளன.

ஒரு அரசு என்றாலும் சரி, அல்லது அந்த அரசிற்கு முண்டு கொடுத்து நிற்கும் ஆளும் வர்க்கம் என்றாலும் சரி, கருத்துலகம் வாயிலாகவே தனது ஆட்சியை நியாயப்படுத்தி நிலை நிறுத்த முயற்சிக்கிறது.

கருத்துகளை மக்கள் மீது திணித்து, மக்களின் விழிப்புணர்வை மழுங்கடித்து, மக்கள் மனவரங்கில் ஒரு பொய்யான பிரக்ஞையை உருவகித்து, கருத்தாதிக்கம் மூலம் தனது ஆட்சியை வலுப்படுத்துகிறது. இந்த வகையில் கருத்துலகமானது மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு அடக்குமுறை கருவியாகப் பாவிக்கப்படுகிறது

அன்றொரு காலம், காலனித்துவப் பேரரசுகள் இந்தப் பூமிமீது தமது வல்லாதிக்கத்தை விரிவுபடுத்திய போது ஆயுத வன்முறையை மட்டும் பாவிக்கவில்லை. கருத்தாதிக்கத்தையும் ஒரு அடக்குமுறைக் கருவியாக அவர்கள் பிரயோகிக்கத் தவறவில்லை. மதம், மொழி, தத்துவம், தார்மீகம், அரசியல் என்ற ரீதியில் அன்னிய பண்பாட்டுக் கருத்துருவங்கள் சுதேசிய மக்கள் மீது திணிக்கப்பட்டன. நிலத்துடன் நின்றுவிடாது மக்களின் மனவுலகமும் ஆக்கிரமிக்கப்பட்டது.

கருத்து விலங்கிட்டு மனித மனங்களை சிறைகொள்வது ஒரு நுட்பமான அடக்குமுறை யுக்தி. உலகெங்கும் அடக்குமுறையாளர்கள் இந்தக் கருத்தாதிக்க யுக்தியையே கடைப்பிடிக்கிறார்கள். பொய்யாக, புரட்டாக, புனைகதையாக, புராணத்துப் புதிர்களாக மெய்மையைத் திரித்து, கருத்துலக மாயைக்குள் மனித மனங்கள் புதைக்கப்படுகின்றன. மனிதர்களை விழித்தெழச் செய்யாது, அவர்களை நித்திய உறக்கத்தில் ஆழ்த்துவதற்கு ஏகாதிபத்தியவாதிகளும் சரி, பேரினவாதிகளும் சரி இந்த எண்ணப் போதையையே பாவித்து வருகின்றனர். மக்களின் கிளர்ச்சியை நசுக்க, புரட்சியை முறியடிக்க, விடுதலை உணர்வை கொன்றுவிட கருத்து ஒரு கனரக ஆயுதமாகப் பிரயோகிக்கப்படுகிறது.

முதலாளித்துவ உற்பத்தி உலகம் தனது அநீதியான சுரண்டல் முறையை நியாயப்படுத்த மிகவும் சாதுரியமான முறையில் கருத்துலகத்தைப் படைத்திருக்கிறது. இந்த அநீதியான உலகில் தான் நீதிபற்றிய கருத்துக்கள் மிகவும் அழகான ஆடைகள் அணிந்து கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கின்றன

இங்குதான் மனித சுதந்திரம், மனிதஉரிமை, மனித தர்மம், மக்கள் ஆட்சி என் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட கருத்துருவத் திரைக்கு பின்னால் மிகவும் கொடூரமான ஒடுக்குமுறை தாண்டவமாடுகிறது. இந்த புனிதமான கருத்துருவக் கோஷங்களை எழுப்பியபடிதான் உலக முதலாளித்துவ அரசுகள் பூமியின் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. முதலாளித்துவ உற்பத்திஉலகில்தான் கருத்துலக மாயைக்கும் நடப்பியல் எதார்த்தத்திற்கும் மத்தியில் எவருமே கண்டுகொள்ள முடியாதவாறு முரண்பாடுகள் மூடிமறைக்கப்பட்டிருக்கின்றன. இங்குதான் உழைக்கும் மக்களிற்கு கருத்துப் போதையும் உழைப்பை சுரண்டுபவனுக்கு நிகரலாபமுமாக சன நாயக சமத்துவம் தழைத்தோங்கி நிற்கிறது.

எந்தவொரு காலத்திலும், எந்தவொரு சமூகத்திலும் அதிகார மேலாண்மையும் கருத்துநிலை மேலாதிக்கமும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக, ஒன்றுக்கொன்று முண்டுகொடுப்பதாக இயங்கிவருகின்றது, அன்றும்சரி, இன்றும் சரி, சமூகத்தில் அதிகார ஆதிக்கம் பெற்ற சக்திகளே கருத்து நிலையிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. முதலாளித்துவ உற்பத்தி உலகில் ஆளும் வர்க்கத்தின் கருத்துநிலை மேலாதிக்கமானது, ஆட்சி அதிகாரத்தை நியாயப்படுத்தி நிலைநிறுத்துவது மட்டுமல்லாது, பொருள் உற்பத்தி உறவுகளை மீளாக்கம் செய்வதையும் நோக்காகக் கொண்டு செயற்படுகிறது. இந்த கைங்கரியத்தை கருத்து உற்பத்தி நிறுவனங்களே நிறைவு செய்கின்றன. கருத்து உற்பத்தியின் மையமாக விளங்கும் கல்வி நிறுவனங்களே இதில் முக்கிய பங்கு வகிப்பதாக அல்தூசர் என்ற சிந்தனையாளர் சுட்டிக் காட்டியிருக்கிறார். இங்குதான் முதலாளித்துவத்தின் தொழிலாக்க சக்தியாக தொழிலாளர் படையும், தொழில் நுட்ப நிபுணர்கள், நிர்வாகிகள், முகாமையாளர்களும் உருவாக்கப்படுகின்றனர். சட்டம், அரசியல், சமூக விஞ்ஞானம், தத்துவம் போன்ற பாடத் திட்டங்கள் முதலாளித்துவ ஆட்சியமைப்பின் சித்தாந்தக் காவலர்களை உருவாக்கிக் கொடுக்கிறது. இப்படியாக முதலாளித்துவம் தனது ஆட்சி அதிகாரத்தை நீடிக்கவும், பொருள் உற்பத்தி உறவுகளை மீளாக்கம் செய்யவும் கருத்துலக நிறுவனங்களைப் பயன்படுத்துகிறது.

சரிந்து போன சோசலிச சர்வாதிகார உலகமும் 'அரசசித்தாந்தம்' என்ற பெயரில் கருத்தாதிக்கம்வாயிலாகவே மக்களைக்கட்டுப்படுத்தி, நெறிப்படுத்த முனைந்தது. மார்க்சீய மரபுவாதத்தை மெய்யுண்மைத்தத்துவமாகச் சித்தரித்து ஆட்சியதிகாரத்தை மக்கள் மீது திணித்தது. இன்றைய மூன்றாம் உலகத்திலும், அரசுகள், கருத்துத்திணிப்பை அடக்கு முறைக் கருவியாகப் பயன்படுத்துகின்றன. சனநாயக பாரம்பரியத்தையும் முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையையும் தழுவிக் கொண்டுள்ள இந்தியா, சிறீலங்கா போன்ற நாடுகளிலும் இதே நிலைமையைக் காணலாம்.

இந்தியாவில் பிராமணிய கருத்துலகம் மேலாண்மை பெற்று நிற்கிறது. பாரத பூமியில் ஆரியர் பாதங்களைப் பதித்த யுகத்திலிருந்து, வேதங்கள் என்றும், இதிகாசங்கள் என்றும், மனு நீதி சாஸ்திரங்கள் என்றும், மனித தர்மங்கள் என்றும் பார்ப்பானியம் படைத்துவிட்ட கருத்துலகம், பூதாகரமாக வளர்ந்து, ஆழவேரோடி, அரசியல் கிளைபரப்பி ஒரு இந்து சாம்ராஜ்யமாக இன்று மேலோங்கி நிற்கிறது.

பஞ்சம், பட்டினிச்சாவு, ஏழ்மை, வறுமை, அநீதி, அடக்குமுறை, இரத்தத்தை உறிஞ்சும் சுரண்டல் முறை - எல்லாவற்றையுமே ஏற்புடையதாக, இயல்பானதாக, சாதாரணவாழ்வின் சாதாரண நிகழ்வுகளாக, முற்பிறவி வினையாக, பிரம்மலோக தர்மமாக நியாயப்படுத்தவல்ல மாபெரும் கருத்தாதிக்க சக்தியாக பிராமணியம் செயல்படுகிறது. துறவிகளின் ஆச்சிரமத்திலிருந்து சினிமா உலகம் வரை, பத்திரிகைத்துறையிலிருந்து பல்கலைக்கழகங்கள் வரைஎல்லாவிதமானகருத்து உற்பத்தி நிறுவனங்களிலும் பார்ப்பானிய ஆதிக்கம் ஊடுருவி நின்று பரந்துபட்ட, இந்திய வெகுசனம் மீது மேலாதிக்கம் செலுத்தி வருகிறது. இந்த மேலாதிக்க கருத்து நிலையானது, இந்திய மேல்தட்டு வர்க்க சக்திகளின்

(5ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# “அக்கரைக்கு அப்பால் இன்ரவியூ”

## தி. உதயசூரியன்

“கோழி மேய்த்தாலும் கொர்ணமேந்து உத்தியோகம்” பார்க்க வேணும் என்ற தனது தாயாரின் விருப்பப்படி, 1963ஆம் ஆண்டு அரச சேவையில் காலடி எடுத்து வைத்த கந்தமுத்தர், முப்பது வருடங்களாகக் கடுமையாக உழைத்துவரும் மனுசர். அரச சேவையில் இருப்பவரென்றால், ஏதோ காலையில் போய் கையொப்பமிட்டுவிட்டால் சரி; இடையிலே உள்ள மற்ற வேலைகளைச் சென்று பார்த்துவிட்டு, மீண்டும் வந்து ஏதோ சொற்ப வேலைகளைக் கவனித்துவிட்டு ஒப்பமிட்டுவிட்டு வருவதுதானே என்று பலர் பேசிக் கொள்வது உண்டுதான். இருந்தாலும், கந்தமுத்தர் இதற்கு விதிவிலக்கானவர். காலையில் உரிய நேரத்திற்குச் சென்று தனது வேலைகளைக் கவனிப்பதோடு, யாராவது லீவில் செல்லும் உத்தியோகத்தர்களது வேலைகளையும் எடுத்துச் செய்து முடிப்பதில் மகிழ்ச்சியடைபவர். அப்படிச் செய்யக் கூடிய திறமையும் கந்தமுத்தருக்கு இருந்ததால் எவ்வித சிரமத்தையும் அவருக்கு உண்டாக்கவில்லை. தற்சமயம் அரசாங்க எழுதுவினைஞர் சேவை வகுப்பு I இல் இருக்கும் கந்தமுத்தர், சிங்களத் தேர்ச்சியில் குறித்த காலத்தில் சித்தியடையாததால், முப்பது வருடங்கள் பூர்த்தியாகியும், தற்பொழுதும் வகுப்பு I இல்தான் உள்ளார். சிங்களத் தேர்ச்சி காரணமாக எத்தனை திறமையுள்ள அரச ஊழியர்கள் அரச சேவையில் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளமை பற்றி சிலவேளைகளில் கந்தமுத்தர் யோசித்து பெருமூச்சு விடுவார்.

கந்தமுத்தருக்கு குடும்பச் சுமை ஒருபுறம்; ஆறு பிள்ளைகளுடன் தனது வயோதிபத் தாயையும் பார்க்க வேண்டிய பொறுப்பு. கந்தமுத்தருக்குத் தான் இளைப்பாறு முன் எப்படியும் எழுதுவினைஞர் அதிஉயர்தரப் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைய வேண்டும் என்ற ஆசை இருந்தது. இதனால், வர்த்தமானியை அடிக்கடி புரட்டிப் பார்த்துக்கொள்ளுவார். யாழ்ப்பாணத்தில் கடமை புரியும் அரச ஊழியர்களுக்கு இப்படியும் ஒரு சாபக்கேடு இருந்து வருகிறது - அதாவது, வர்த்தமானி இங்கு தபாலில் வந்து சேருமுன்னரே பதவிஉயர்வுப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி காலாவதியாகியிருக்கும். கந்தமுத்தரின் நல்ல காலத்திற்கு யாரோ கொழும்பிலிருந்து வரும்போது கொண்டுவந்த வர்த்தமானி கைக்குக் கிடைக்கவே, அவரும் விண்ணப்பம் செய்தார். இப்பதவி உயர்வுக்குக் கொழும்பில் ஒரு இன்ரவியூ மாத்திரமே. கடந்த கால சேவை விபரங்களும், அனுபவங்களும் இன்ரவியூவில் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும். கந்தமுத்தருக்கோ தனக்கு இன்ரவியூ சக்சஸ் ஆகும் என்ற திடமான நம்பிக்கையிருந்தது. கந்தமுத்தர் இன்ரவியூவைச் சந்திக்கத் தேவையான ஆவணங்களையும் தயார்படுத்திக் கொண்டார்.

இன்ரவியூவுக்கான கடிதம் ஒருவாறு ஒருவார காலத்திற்கு முன்னர் கிடைத்தது. ஐம்பத்திரண்டு வயதான கந்தமுத்தருக்கு மனதில் ஒரே நெருடலாக இருந்தது தான் எப்படிக் கிளாலியூடாகப் பயணம் செய்யப் போகிறேன்; தான்இப்பாதை ஊடாகச் சென்று வருவது சாத்தியப்படுமாவென்று எவ்வாறாயினும், கொழும்பு செல்வதெனமனதைத்தேற்றிக் கொண்டு பயண ஏற்பாடுகளைக் கவனித்தார். கந்தமுத்தர் பயணத்தை மேற்கொள்ளவிருந்த தினம், அவரது வயதான தாயாருக்கு திடீரென வருத்தம் கடுமைப்படுத்த, அவசரமாக யாழ். ஆஸ்பத்திரியில் காட்டி ஆவன செய்து கொண்டு கந்தமுத்தர் கிளாலிக் கரையில் படகுக்காகக் காத்திருக்கிறார் காத்துக் கொண்டிருக்கும் வேளையில், இன்ரவியூ யோசனை ஒருபக்கம். சுகயீன முற்றிருக்கும் தாயாரின்யோசனை மறுபக்கம். தன்னுடன் உடன் பிறந்த சகோதரர்கள் ஏழு பேர் இருந்தும், தற்போது எவரும் இங்கு இல்லாதது கந்தமுத்தருக்கு எரிச்சலையூட்டியது. நாட்டுப் பிரச்சினையைச் சாட்டாகச் சொல்லி கனடா, சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி என்று சென்றுவிட்டனர். சென்றாலும் பரவாயில்லை; தாயாரைப்பற்றி விசாரித்து ஒரு வருடத்தில் ஒரு கடிதம் கூட எழுத முயற்சிப்பதில்லை. ‘‘ஐஆம்ஏபுவர் கிளாக். தே ஆர் ஓல் றைற் தெயார்’’. இதனாலேயே கந்தமுத்தர் சகோதரர்களை நொந்து கொண்டார்.

பயந்த சுபாவம் கொண்ட கந்தமுத்தர் கடற்படையினரின் பரா வெளிச்சத்தைக் கண்டு அருகிலிருந்த இளம் பெடியனைப்பார்த்து ‘‘தம்பி! யாரடா உந்த வெளிச்சம் அடிக்கிறது, நேவிக்காறர். கிட்ட வாறாங்களோ, கண் போட்டால்அடிப்பாங்களோ’’ என்று வினவினார். இளம் பொடியன் கந்தமுத்தரைப் பார்த்து ‘‘ஐயா ஒன்றுக்கும் பயப்படாதேங்கோ. அது நேவிக்காறற்றை வெளிச்சம் தான் என்றாலும் அவர்கள் எங்களுக்குக் கிட்டடியில் தற்சமயம் இல்லை. அவர்கள் எங்களுக்குக் கிட்ட வரமாட்டார்கள். எங்கடை தம்பியவை அவையளை இப்ப நல்லாய்ப் பயப்படுத்தி வைத்திருக்கிறார்கள்’’ என்றான். இளம் பெடியனின் பயமின்மையையும், தனக்கு ஆறுதல் கூறியதையும் கந்தமுத்தர் மனதிற்குள் மெச்சிக் கொண்டார். அக்கரையை அடைந்ததும் தான் கந்தமுத்தருக்கு அரை உயிர் வந்தது போல இருந்தது. ‘உத்தியோகம் புருஷ இலட்சணம்’ என்பார்கள் அரசசேவையில் சேர்ந்த காலம் தொடக்கம் தான் படும் கஷ்டங்களை பயணத்தின் போது அசை போட்டுக் கொண்டார். இப்படித் தானா சகல அரச ஊழியர்களும் கஷ்டப்படுகின்றனர்!

இன்ரவியூவுக்கு வெளிக்கிட்டதே, கொஞ்சம் சம்பளம் இதனால் கூடும் பென்சன் எடுக்கும் போது கொஞ்சம் பென்சனும் இதனால் கூடும் என்ற எண்ணத்திலேயே ஆகும். இருந்தாலும் மனதுக்குள் இன்னொரு பயமும் வந்தது; இன்ரவியூவில் தற்சமயம் தேறிவிட்டால் பிற மாவட்டங்களுக்கு மாற்றம் தந்துவிடுவார்களோவென்று. அப்படியாயின் எனது குடும்பத்தையும், வயதான அம்மாவையும் யார் கவனிப்பது!

கந்தமுத்தர் ஒருவாறு பல சோதனைச் சாவடிகளைத் தாண்டிப் பலவிதமான பயண அனுபவங்களுடன் கொழும்பைப் போய்ச் சேர்ந்தார் கந்தமுத்தர் மாற்றலாகிக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அதற்குப் பிறகு கொழும்பு சென்றதில்லை. அரைகுறையில் பேசத்தெரிந்த சிங்களமும் அடியோடு போய்க் கொண்டிருக்கும் காலம் என்றாலும், சில சொற்களை வைத்துக் கொண்டு சமாளித்துக் கொள்ளும் திறமை கந்தமுத்தருக்கு இருந்தது. இந்தக் காலத்திலை யாழ்ப்பாணத்து ஆட்களின்ரை வீடுகளுக்குப் போய் நிற்பது சரியல்ல என்று கந்தமுத்தருக்குப் பட்டது கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து ஒரு ஓட்டோ மூலம் கொட்டகேனாவிலுள்ள விடுதியொன்றிற்கு சென்றார்கந்தமுத்தர். நேரம் இரவு 10:30 மணி. இருந்தாலும் விடுதி, ரெயினைப் பார்த்துக் கொண்டு இருப்பது போல திறந்திருந்தது. மொட்டை மாடியின் ஒரு பக்கதில் வீடியோ ஓடிக்கொண்டிருக்கிறது. மற்றப்பக்கத்தில் 304 அடி சூடுபிடித்துக் கொண்டிருந்தது.

கந்தமுத்தர் ஓட்டோவால் இறங்கியதும் பலர் யாழ்ப்பாண நிலைவரம், பயண நன்மை, தீமை என்பனபற்றி ஆவலுடன் கேட்டனர் களைத்த முகத்துடன் சென்ற கந்தமுத்தரை உள்ளே செல்ல வழிவிட்டனர். அலுவலகக் கறுப்புப் பையுடன் சென்ற கந்தமுத்தரைக் கண்ட றிசெப்சனிஸ்ட் ‘‘ஐயாவுக்கு தனி அறையா ......” என்று இழுத்தான். கந்தமுத்தருக்கு மனதிற்குள் ஒரே எரிச்சலாய் இருந்தது. ‘‘தம்பி, தான் இன்றிரவு மாத்திரம் தான் தங்குவேன்; நாளை மத்தியானம் இன்ரவுயூ; உடனே திரும்பிவிடுவேன்’ என்றார். வயதான தாயைப் பற்றி மனதுக்குள் அடித்துக் கொண்டிருந்தது. ‘‘பாயும் தலை அணையும் தந்தால் போதும்; நான் படுத்துவிட்டு எழும்பி விடியப் போய்விடுவேன்” என்றார். கொடுத்த பாயும், தலை அணையும் பலர் படுத்தெழும்பியவை என்பதை அவற்றைப் பார்த்த மாத்திரத்திலேயே உணர்ந்துகொண்டார். அலைச்சலுடன்படுத்த கந்தமுத்தர் உடனே குறட்டைவிட ஆரம்பித்து விட்டார்.

அன்றிரவு நடுநிசி 12.30 மணியிருக்கும்; ஹோட்டல் வாசலில் பொலிஸ் வாகனங்கள் இரண்டு வந்து ஒலி எழுப்பும் சத்தம் கேட்டது. கந்தமுத்தருக்கு கொழும்பில் தற்சமயம் நடக்கும் ஆள்பிடி சம்பவங்கள் பற்றித் தெரியுமென்றாலும், இந்தநேரத்தில் அதுவும் இந்த 52 வயது சென்ற மனிதனை பிடிப்பார்கள் என்று எண்ணவில்லை. உள்ளே திடுதிடுவென வந்த பொலிஸ் கோஷ்டி சிங்களத்தில் ‘‘ஒக்கமல அய்டன்டி காட் கண்ட’’ என்று பெருத்த குரலில் எழுப்பியது. கந்தமுத்தருக்கு அந்நேரத்தில்தான் ஆரம்ப நாட்களில் சிங்களம் படிக்கும்போது பட்ட கஷ்டங்கள் நினைவுக்கு வந்தன. உள்ளே நின்று கொண்டிருக்கும் பொலிஸ்காரர் சகலரையும் பலவிதமான கேள்விகளைக் கேட்டுப் பயப்படுத்தினர். பலர் சிங்களம் புரியாததால் விழித்தனர். கந்தமுத்தரிடமும் பல கேள்விகள் கேட்கப்பட்டன கந்தமுத்தரும் தன்னாலானசிங்களத்தை உரிய நேரத்தில் அவிட்டு விட்டார். ‘‘மம ஆண்டுவே சேவையேஇன்னே; சேவையே உசஸ் கிறீம இன்ரவியூவர யாப்பணய இந்தாலாஆவே’ ‘‘அத தமாய் ஆவே; கெர இன்ரவியூ; ‘‘றாஜ பரிபாலனயே’‘ என்று விளக்கினார். பொலிஸ்காரர் சிங்களம் பேசியதையோ அல்லது வயதையோ பார்த்து விடவில்லை. அரை மணித்தியாலத்திற்கு மேலாக பொலிஸ்காரருடன் கந்தமுத்தர் வாதிட்டும்பலனளிக்கவில்லை. ஹோட்டலில் இருந்த யாருக்கும் பரிவு காட்டாது எல்லோரும் வாகனங்களில் உடன் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டனர். பொறுப்பதிகாரியுடன் கந்தமுத்தர் தனது நிலையை ஆங்கிலத்தில் விளக்கியதன் பயனாக, பொறுப்பதிகாரி கந்தமுத்தருக்கு ஒரு கொண்டிசன் போட்டு மத்தியானம் நடைபெறவிருக்கும் இன்ரவியூவில் கலந்து கொள்ள அனுமதி வழங்கினார். ‘‘ஐவில்அலவ் யூ ரூ அற்றண்ட் த இன்ரவியூ; பட் யூ மஸ்ற்கம் பாக்ஆவ்ரதஇன்ரவியூ’’ என்றார் பொறுப்பதிகாரி கந்தமுத்தர்‘தாங்யூசேர்’ என்று கூறி ரொறன்ரன்ற்ஸ்கொயாரில் உள்ள அலுவலகத்திற்கு இன்ரவியூவிற்காக ஓட்டமெடுத்தார். இன்ரவியூவில் தான் பட்ட கஷ்டங்களையும், பொலிஸ் தன்னைத் தேவையில்லாது பிடித்துக் கஷ்டப்படுத்தியதையும், மீண்டும் பொலிசில் சரணடைய வேண்டியுள்ளதையும் கூறியும், மேலதிகாரிகளால் கந்தமுத்தரின் கஷ்டங்களைக் கேட்க முடிந்ததேயொழிய எவ்வித பரிகாரமும் காண முடியவில்லை.

இன்ரவியூ முடிந்ததும் கந்தமுத்தர் வக்கீல் ஒருவரைச் சந்தித்து, வக்கீலுடன் பொலிஸ் நிலையம் சென்று, தன்னை விடுவித்துக் கொள்கின்றார். இன்ரவியூவுக்கு வந்து தேவையில்லாது வக்கீலுக்கு ரூ 500/- கொடுக்க வேண்டியதை எண்ணி கவலையடைந்தார். இனி கொழும்பில் ஒரு நிமிடமும் தங்கக்கூடாது என்று எண்ணியபடி செல்கையில் கந்தமுத்தருக்கு ஐ.சி.ஆர்.சி. மூலமாக செய்தி ஒன்று வந்தது. செய்தியைப் படித்ததும் கந்தமுத்தர் மயக்கமடையும் நிலை ஏற்பட்டது சுகவீனமுற்றிருந்த தாயார் மரணமாகி ஈமக்கிரியைகளும் முடிவடைந்து விட்டதாக அச்செய்தி கூறியது. ஏழு உடன்பிறப்புகள் போலில்லாது தானும், தனது குடும்பமும் வயோதிபத் தாயைப் பார்த்து இறுதிக்கடமை செய்யவென இருந்த கந்தமுத்தருக்கு இந்தப் பாழ்பட்ட இன்ரவியூவினால் இந்த நிலை ஏற்பட்டதை நொந்து அழுதார்.

தன்னையே அறியாது கால்கள் கோட்டை புகையிரத நிலையத்திற்குச் செல்ல, வவுனியா வரை செல்லும் புகைவண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு தாயாரின் முப்பத்தொன்றுக்காவது சென்றுவிடவேண்டும் என்று சிந்தித்துக் கொண்டார்.

---

# குடும்பப்பதிவு அட்டை

03) திருமணமான புதிய குடும்பத்தினர் தமக்கான குடும்பப் பதிவுஅட்டை பெறுவதற்கு கவனத்தில் கொள்ள வேண்டியவை;

i) மணமகனின் பெற்றோரின் குடும்பப் பதிவு அட்டையையும்,

ii) மணமகளின் பெற்றோரின் குடும்பப் பதிவு அட்டையையும்,

iii) திருமண அத்தாட்சி சான்றிதழையும்,

iv) இருபகுதியினரின்குடும்பப் பதிவு அட்டைகளிலும் தத்தமது பெயர்களை நீக்கி, புதிய அட்டை பெற விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தினையும்,

v) இருபகுதி கிராமசேவகரினதும் உறுதிப்படுத்தலையும் ஒன்றாக இணைத்து புதிய குடும்பம் வசிக்க இருக்கும் கிராமசேவகரின் உறுதிப்படுத்தலுடன் தத்தமது பகுதி குடும்ப அட்டைப் பதிவு அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைக் கையளித்தால் குடும்ப அட்டைப் பதிவுப் பகுதியினரால் புதிய குடும்ப அட்டை விண்ணப்பப் படிவம் கையளிக்கப்பட்ட அலுவலகத்தில் வழங்கப்படும்.

குறிப்பு: பெற்றோரின் கிராம சேவகர் பிரிவு தவிர்ந்த வேறு கிராமசேவகர் பிரிவினூடாகவும் விண்ணப்பிக்கலாம்.

04) குடும்பப் பதிவு அட்டை இடமாற்றம் செய்யப்பட முடியாதது ஆகும். குடும்பங்கள் இடமாற்றத்தினை கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினூடாக விண்ணப்பித்தால் தற்காலிக முகவரியில் மாற்றத்தைப் பதிய அனுமதி வழங்கப்படும். நிரந்தரமாக ஆறு மாதங்களுக்கு மேல் அம் முகவரியில் வசித்தால் மட்டுமே புதிய அட்டை அவ்விடத்து நிரந்தர முகவரியுடன் வழங்கப்படும்.

05) குடும்பமாக அன்றி தனியாக யாழ். மாவட்டத்தில்தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், உயர்வகுப்பு மாணவர்கள், தொழில் நிமித்தம் தங்கியுள்ளவர்கள், பாதிரிமார்கள், கன்னியாஸ்திரிகள் ஆகியோர் தனிநபர் அட்டை பதிந்திருத்தல் வேண்டும். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினூடாகவும், ஏனையோர் உத்தியோகபூர்வ கடிதத்தினுடனும், கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

06) யாழ். மாவட்டத்தில் வசிக்கும், யாழ். மாவட்டம் தவிர்ந்த பிற மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களாயின் தங்கியுள்ள பகுதி, கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட சகல விபரங்களுடனான விண்ணப்பப் படிவத்தினைக் குடும்ப அட்டைப் பகுதி அலுவலகத்தில் கையளித்தால் குடும்ப அட்டைப்பகுதியினால் சரி பார்க்கப்பட்டு அவர்களிற்கான குடும்பப் பதிவு அட்டை வழங்கப்படும்.

07) வடபகுதிக்கு வெளியே செல்லும்போது குடும்பப் பதிவு அட்டையை அவசர அனுமதி வழங்கும் காரியாலயத்தில் ஒப்படைப்பவர்கள் மீண்டும் வந்ததும் அதே காரியாலயத்திற்குச் சென்று குடும்பப் பதிவு அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பதிவுகளை கால தாமதமின்றி மேற்கொண்டு, இதனால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களைக் குடும்ப அட்டைப் பதிவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

# அங்கோலாவில் ஐ. நா. பெற்ற படிப்பினை மொசாம்பிக்கில் பயன் தருமா?

'பெருநாசம்' என்றே தற்போதைய அங்கோலாவின் நிலையை அங்குள்ள ஐ. நா. அதிகாரியொருவர் வருணித்தார் 'பொசுனிய, சோமாலிய, கம்போடிய, நிலைமைகளோடு இதை ஒப்பிட்டுக் கூட பார்க்க முடியாது' என மேலும் அவர் கூறினார். இது மிகைப்பட்ட கூற்றாக இருந்த போதும் அங்கோலாவின் நிலைமை மிக மோசமானதாகவேயுள்ளது. கடந்த இரண்டொரு வாரங்களாக சராசரி நாளொன்றிற்கு இறப்புக்கள் ஆயிரம் ஆக அதிகரித்து விட்டன. கடந்த ஒக்டோபர் மாதம் மீண்டும் போர் தொடங்கிய பின் இதுவரை 1/2இலட்சத்திற்கு மேற்பட்டோர் இறந்து விட்டனர். இத்தொகை மேலும் அதிகரிக்கின்றது. மாதத்திற்கு 4000 சிறுவர் உயிரிழக்கின்றனர். ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட பலர் பட்டினியின் விளிம்பில் வாடுகின்றனர். 1 மில்லியனுக்கும் இரண்டு மில்லியனுக்கும் இடைப்பட்ட மக்கள் பஞ்சத்தின் பிடியில். UNHCR போசாக்கின்மை குறித்தான தனது அவசர அபாய அறிவிப்புக்களை அறிவிக்கத் தொடங்கிவிட்டது. (NUTRITION EMERGENCY) அடுத்த அறுவடைக்கோ இன்னும் ஆறு மாதம் இருக்கின்றது. அதற்கிடையில் சோமாலியாவைப் போலவே இங்கும் போர் காரணமாக உணவு உற்பத்தியில் மக்கள் ஈடுபட முடியாத நிலை உருவாகி விட்டதாக செயர் அலுவர் கூறுகிறார். அங்கோலாவின் உள்ளூர் பகுதி மக்கள் எலிகளையும், வேர்களையுமே உணவாக உண்ணும் நிலை.

இக்கொடிய நிலை எவ்வாறு தோன்றியது? என்ன நடந்தது- அங்கோலாவிற்கு? சில காலம் முன்னர்தான் போர்ப்புயல் தணிந்து ஐ. நாவின் தலையீட்டால் அமைதி தென்றல் வீசும் என எதிர்பார்க்கப்பட்ட நாடல்லவா அங்கோலா என்ன நடந்தது என உலகம் ஆராய்ச்சியில் மூழ்கையில் அங்கோலா சீரழிகின்றது.

இப்போது ஐ. நா.விற்கு ''அங்கோலாவில் படித்த பாடங்கள்'' என புதிய அத்தியாயத்தை தனது வரலாற்றோடு இணைக்க வேண்டிய நிலையேற்பட்டு விட்டது. 16 வருட உள்நாட்டுப் போரின் கொடுமை தாங்காது அங்கோலா மக்கள் வாடிய போது 1991ஆம் ஆண்டு ஐ. நாவின் பின்புலத்தோடு வல்லரசுகளின் முயற்சியால் அங்கு உடன்பாடு ஏற்பட்டது. சோவியத் ஆதரவோடு ஆட்சிசெய்த MPLA அமைப்பின் யோன் எட்வார்டோ சான்டோசுக்கும், தென் ஆபிரிக்க, அமெரிக்க ஆதரவோடு அவர்க்கு எதிராக போர் தொடுத்திருந்த 'யுனிற்றா அமைப்பின்' சவிம்பிக்கும் - தத்தமது எசமானர் கைவிட்ட நிலையில் - உடன்பாட்டிற்கு சம்மதிப்பதை தவிர வேறு வழியிருக்கவில்லை. இருதரப்பும் தமது படைகளை கலைத்து புதிய இணைந்த தலைமையில் ஒரு படையைக் கட்டி எழுப்பவும் சனநாயக வழியில் தேர்தலில் நிற்கவும் சம்மதித்தன. தேர்தலும் நடந்தது. ஆனால் சவிம்பி தோற்றுப் போனார். தோற்றுப் போனவுடன் தேர்தல் முறையாக நடக்கவில்லையெனக் கூறி மீண்டும் போரைத் தொடக்கிவிட்டார். தொடக்கத்தில் MPLA அரசு தடுமாறியது. யுனிற்றாவோ பல மாகாணத் தலைநகரங்களைக் கைப்பற்றி அங்கோலாவின் 1/3 பகுதியை தன் வசமாக்கிவிட்டது. அரசு தன்னை நிலைப்படுத்திக் கொண்டு மீண்டும் தாக்குதல்களை தொடங்கவே அழிவுகள் ஆரம்பமாகியது. தான் நடாத்திய தேர்தலையே தவறு என கூறி ஐ. நாவை மீறிச் செயற்படும் சவிம்பியை வழிக்கு கொண்டுவர ஐ. நாவால் முடியவில்லை சவிம்பியின் நண்பனான அமெரிக்காவாலும் முடியவில்லை. முன்னைய புஷ் நிருவாகம் சவிம்பிக்கு ஆதரவாக செயற்பட்டதாக இப்போது குற்றச்சாட்டு வேறு கிளம்புகிறது. ஐ. நாவோ யுனிற்றாவிற்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கப்போகின்றது. ஆனால் நிரம்பிய நிதிவளம், போதிய ஆயுதங்கள், எண்ணெய், இரத்தினக்கல் பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் யுனிற்றா அமைப்பு, இதனால் பாதிக்கப்படாது என்று கருதப்படுகின்றது. அதுபோலவே அரசுப் படைகள் சவிம்பி கைப்பற்றிய பகுதிகளை மீட்டெடுத்தால் கூட அவர் முன்னர் 1970, 80களில் செய்தது போல காடுகட்கு சென்று தனது வழமையான போரை ஆரம்பித்து விடுவார். ஏனென்றால் அவர் சார்ந்த இனக்குழுவான ஓவிம்பண்டுவின்(OVIMBUNDU) ஆதரவு நிறைய அவருக்குண்டு.

எனவே இப்போது அங்கோலா அரசு 'ஐ. நாவை நம்பிக்கெட்டேன்' என கடுமையாக கண்டிக்கின்றது. ஐ நா அங்கோலாவில் படித்த பாடங்கள் இப்போது ஆராயப்பட்டு தொகுக்கப்பட்டு கவனமாக பரிசீலிக்கப்படுகின்றன. ஏனெனில் இப்போதுதான் இன்னொரு ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கில் அமைதிப் பணி ஆரம்பமாகியுள்ளது எனவே மொசாம்பிக்கில் ஐ. நாவின் அமைதிப்பணி தடம்புரளக் கூடாது என்பதில் உலகமே அக்கறை கொள்கின்றது. இன்னொரு அங்கோலாவோ அல்லது சவிம்பியின் முன்னுதாரணத்தை மொசாம்பிக் தலைவர்களே பின்பற்றக் கூடாது என ஐ. நா கவலைப்பட்டாலும் மொசாம்பிக்கிலும் ஐ. நா ஆகக் கூடிய கவனம் செலுத்தவில்லை- என ஆபிரிக்க அரசியல் நோக்கர்கள் இப்போது குறைபடுகின்றனர். அமைதிக்கும் போருக்கும் இடைநடுவில் மொசாம்பிக் நிலையிருப்'தாக கூறப்படுகிறது.

இன்று ஐ நா.வின் அமைதிப்பணி எல்லாத் தரப்பாலும் கண்டிக்கப்படும் அவலநிலை தோன்றுகிறது. ஐ. நா வை மறைமுகமாக வழி நடத்தும் பில் கிளிண்டனோ பொசுனியாவில் ஐ.நா. என்ன செய்கிறது எனக் கண்டிக்கிறார். 'ஊருக்கு இளைத்தவன் ஆண்டி' என்பது போலாகும். ஐ.நா. தனது மதிப்பை மொசாம்பிக்கிலாவது காப்பாற்ற முயல்வதாக தெரிகின்றது.

**பாலகுமாரன்**

அங்கோலாவின் சிக்கலின் ஆழத்தை புரியாமல் ஒரு சில நூறு கண்காணிப்பாளர்களை, ஆயுதம் எதுவுமின்றி என்ன செய்யப்ப வேண்டும் என்றிரு விளக்கம் இல்லாமல் இரு தரப்பின் ஆயுதங்களை களைவதற்கு போதிய ஆணையைக் கொடுக்காமல் அனுப்பி ஐ.நா. அங்கு ஒடுக்கப்பட்டது. ஏனென்றால் 1 கோடிக்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட அங்கோலாவில் தேர்தலை அவதானிக்க வெறுமனே 480 அலுவலர் மட்டுமே அனுப்பப்பட்டனர். (முன்னர் 18 இலட்சம் பேரைக் கொண்ட நமீபியத் தேர்தலை கண்காணிக்க 6,000 பேர் அனுப்பப்பட்டதை இங்கு குறிப்பிட வேண்டும்) மேலும் ஐ நாவின் ஆணையை மீறி நடப்பதற்காக சோமாலியாவில் ஜெனரல் அய்டிட்டை பிடிக்க அல்லும் பகலும் பெரும் போர் நடாத்தி இதுவரை தானும் 60 போர் வீரர்களை இழந்து 500 சோமாலிய மக்களை கொன்று பெருமளவு பணத்தை செலவழிக்கும் ஐ. நா. ஆபிரிக்காவிலே பெரும் போர்ப் பிரபு எனக் கூறப்படும் யோனாஸ் சவிம்பியை வழிக்கு கொண்டு வர ஏன் முடியவில்லை என்னும் கேள்விகள் இன்று எழுப்பப்பட்டுள்ளது. அதே சமயம் சவிம்பி செய்தது போல் MPLAஅரசு செய்திருந்தால் என்ன நடந்திருக்கும் என கேள்வியும் சிலரால் எழுப்பப்படுகின்றது.

அண்மையில் அமெரிக்க வேண்டுகோளிற்கு இணங்கி சோமாலியாவிற்கு தனது படைகளை அனுப்பும் இந்திய அரசை கடுமையாக கண்டித்த இந்திய அரசியல் நோக்கர்கள் இந்தியப் படைகளை சோமாலியாவிற்கு அனுப்புவதை விடுத்து மொசாம்பிக்கு அனுப்பலாமே என கூறினர் என்பது இங்கு குறிப்பிட வேண்டியது.

எனவே இப்போது அங்கோலா போலல்லாமல் முன்னாள் போர்த்துக்கேய குடியேற்ற நாடான மொசாம்பிக்கில் வெகு அவதானமாக ஆறுதலாக செயற்பட ஐ.நா. விரும்புவதாக தெரிகின்றது. கடந்த 1992-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் — மொசாம்பிக்கின் ஆட்சியை மேற்கொள்ளும் பிரெலிமோ (FRELIMO) அமைப்பின் சனாதிபதி சிசானோவிற்கும் (JOAGUIM CHICSANO) அதை எதிர்த்து தென்னாபிரிக்க ஆதரவோடு போராடிய மிகத் தீவிரம் வாய்ந்த றினாமோ (RENAMO) அமைப்பின் தலைவர் தலக்காமாவிற்கும் (DHLAKAMA) உடன்பாடு ஐ. நா. வால் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி இருபதினாயிரத்துக்கு (20,000) மேற்பட்ட போராளிகள் கொண்டுள்ள றினாமோவும் (50,000) ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட துருப்புக்கள் கொண்ட பிரெலிமோ அரசும் ஐ நா. வால் அமைக்கப்படும் 49 மையங்களில் ஒன்றாகி தமது ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் பின்னர் புதியதொரு தேசிய இராணுவம் இவ்விரு பகுதியாளரின் சமபங்கை, கொண்டதாக அமைக்கப்படும். இதனையும் நிவாரணப் பணிகளையும் தேர்தல்களையும் கண்காணிக்க ஐ நா. இரு தரப்பையும் கொண்ட குழுக்களாக அமைந்துள்ளது. இதன்படி கடந்த டிசம்பர் மாதம் தேர்தல் நடந்திருக்க வேண்டும்.

ஆனால் அங்கோலாவின் படிப்பினைகளால் விழிப்படைந்த ஐ நா எதனையும் துரிதப்படுத்தவில்லை. ஏனென்றால் தனக்குத் தர ஒப்புக் கொண்ட தேர்தலில் பங்குபற்றுவதற்கான செலவிற்கான பணம் கைக்கு வராமல் 49 மையங்களும் உருவாக்கப்படாத நிலையில் (இதுவரை 20 மையங்களே திறக்கப்பட்டுள்ளன) தனது போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்க மாட்டார் என தலக்காமா கூறிவிட்டார். எனவே ஐ. நா தேவையான ஆணையை, நிதியை முதலில் பெற முயல்கிறது- இப்போது 7000 ஐ-நா அலுவலர்கள் (4000 படையினர், 3000 அதிகாரிகள்) மொசாம்பிக்கிற்கு அனுப்ப முடிவாகி முதற்தொகுதி 1000 துருப்பினர் அங்கு சென்று விட்டனர்- மேலும் மொசாம்பிக்கில் ஐ. நாவின் நடவடிக்கைகட்கு பொறுப்பாக இருக்கும் மூத்த அதிகாரி நிரம்பிய அனுபவமுடையவர். அவர் மிகுந்த நல்லுறவை இருதரப்போடும் பேண முயல்கிறார். வாரத்தில் இரண்டு நாட்கள் தலக்காமாவின் மலைப்பகுதி தலைமையகம் சென்று அவருடன் தங்குகிறார். இரு தரப்பினரும் ஆயுதங்களை ஒப்படைத்து புதிய தேசிய இராணுவம் உருவாகும் வரை தேர்தலிற்கு அவசரமில்லை என அவர் கூறுகிறார். இதன்படி அடுத்த வருடம் ஒக்டோபர் வரை தேர்தல் நடைபெறாது என தெரிகின்றது. இதற்கிடையில் றினாமோவிலிருந்தும், பிரெலிமோவிலிருந்தும் சமமாக தெரியப்பட்ட 100 பேர் சிம்பாவே அனுப்பப்பட்டு அங்கு பிரித்தானிய உயர் இராணுவ அதிகாரிகளினால் பயிற்றுவிக்கப்படவுள்ளனர். இவர்களே புதிய தேசிய அரசியல் சார்பற்ற, நடுநிலை வகிக்க வேண்டிய இராணுவத்தை உருவாக்க வேண்டியவர் ஆவர். இவ்வாறாக ஐ.நா பணி அங்கு நகர்கின்றது. எனவே இன்று அமைதிக்கும், போரிற்கும் நடுவழியில் மொசாம்பிக் செல்கிறது. எனினும் மொசாம்பிக் அமைதி தடம் புரளாமல் செல்ல தேவையான சர்வதேச அழுத்தம் போதாது என்றே ஆபிரிக்க அரசியல் நோக்கர்கள் குறைபடுகின்றனர். சிக்கல் வரும்போது ஐ. நா. தீர்க்கமாக முடிவு எடுத்து செயற்பட வேண்டும் என இவர்கள் விரும்புகிறார்கள். ஏனென்றால் எமது எதிரியோடு கூடி வாழ்வது என்பது கழுத்தில் கத்தியோடு சீவிப்பதற்கு சமம் என்கிறார் றினாமோ தலைவர் ஒருவர். எனவே மொசாம்பிக்கிலாவது ஐ. நா. அமைதியைக் காக்கட்டும் என உலகம் இப்போது வேண்டிக் கொள்கிறது.

## கருத்துலகமும்

அதிகார உறவுகளுடன் ஒன்றிணைந்ததாக பிராமணிய ஆட்சியமைப்பு கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த பிராமணிய மேலாண்மை (HEGEMONY) இந்திய தேசிய இனங்களின் தேசியவாத கருத்தோட்டங்களையும் படிப்படியாக ஏப்பம்விட்டு வருகிறது.

கருத்துலகமானது மார்க்சிய மரபுவாதிகள் கருதியது போல பொருளாதார அடித்தளத்திலிருந்து மேலெழும் பிரதிபிம்பங்கள் அல்ல. அன்றி 'பனிமூட்டம்' போன்ற பொய்யான கற்பனாவாத பிரமைகளும் அல்ல. கருத்துலகமானது மனித வாழ்வையும் சமூக இயக்கத்தையும் நிர்ணயிக்கும் ஒரு மாபெரும் சக்தி. கிராம்ஸி என்ற தத்துவ அறிஞன் கூறியது போல, 'ஒரு பொருளாய வரலாற்று சக்தி'. சமூக மாற்றத்தை ஏற்படுத்த வல்ல சக்தி.

பொருளாதார கட்டுமானத்தின் மீது கருத்துலகம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது என்றும் பொருள் உற்பத்தி உறவுகளில் அடிப்படையான மாற்றங்கள் நிகழ்ந்து சமூக மாற்றம் ஏற்படும் பொழுது, கருத்துலகில் தன்னிச்சையாகவே மாற்றங்கள் ஏற்படுமெனவும் மரபுவாத மார்க்சியம் கருதியது. இது ஒரு தவறான கண்ணோட்டம் என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது.

கருத்துலகமானது, சமூக உலகத்தின் ஒரு உலகமாக, சமூக வாழ்வியக்கத்துடன் பின்னிப் பிணைந்து இயங்கியபோதும் அதற்கொரு தனித்துவமுண்டு. தன்னியல்பான வாழ்வுண்டு. பொருளாதார மாற்றங்களினால் கருத்துநிலையில் தன்னிச்சையாக மாற்றம் நிகழ்வதில்லை.

கருத்துலக மாற்றம் கருத்துப் புரட்சியால் ஏற்படுகிறது. கருத்துப் போராட்டத்தால் நிகழ்கிறது. ஆழமான விழிப்புணர்வால் ஏற்படுகிறது.

பழைய கருத்துக்களுக்குப் பதிலாக புதிய கருத்துகளை திணிக்க முயல்வது கருத்துப் புரட்சியாகாது. அது கருத்துலக மாற்றத்தைக்கொண்டு வரப்போவதில்லை. சீனக் கலாசாரப் புரட்சி கருத்துலகை மாற்றவில்லை. எதிர்புணர்வையே தோற்றுவித்தது.

புதிய கருத்துக்கள், புரட்சிகரமான கருத்துக்கள் மக்களின் மனதைப் பற்றிக் கொள்ளும் பொழுதே கருத்து மாற்றம் நிகழ்கிறது.


அந்தக் கருத்துக்கள், மக்களின் மண்ணுக்கு நீர்ப்பாய்ச்சி, அவர்களின் வரலாற்று வேருக்கு உரமூட்டி, அவர்களின் சமூக பண்பாட்டு வாழ்வை மேம்படுத்தி, ஒளிமயமான எதிர்காலத்தை குறியிட்டுக் காட்டுவதாக அமையும் பொழுதே அவை மக்களைப் பற்றிக் கொள்கின்றன.

(நன்றி - வெளிச்சம்)

## 'சுகாதாரம்' என்பதன் பொருள் என்ன?

சுகாதாரம் என்பதற்கான ஆங்கில வார்த்தை HEAITH என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனால் இந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு பொருள் உண்டு என்பதை பலரும் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை.

Here Every Activity Leads To Health என்ற வாக்கியத்தில் வரும ஒவ்வொரு சொற்களின் முதலெழுத்துகளின் தொகுப்பே HEALTH ஆகும். இங்கு ஒவ்வொரு நடவடிக்கையும் சுகாதாரத்தைப் பேணவே என்பதுவே இவ் வாக்கியத்தின் பொருள் என்பது குறிப்பிடத்தக்கது.




# தமிழீழத்தின் முதலாவது வீடியோ சஞ்சிகை

தகவல் தொடர்புச்சாதனங்களின் வளர்ச்சியும், ஆற்றலும் அதிகரித்துச் செல்ல, செல்ல உலகம் குறுகியதாகி வருவதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். அச்சு ரீதியான தொடர்புச் சாதனங்களின் (PRINTMEDIA) வளர்ச்சி, இன்று இலத்திரனியல் தகவல் தொடர்புச் சாதனங்களின் (ELECTRONIC MEDIA), செய்மதித் தொடர்பு வரையான வளர்ச்சியாகி, தகவல் தொடர்புச் சாதனங்கள் பல்கிப் பெருகி நிற்கின்றன.

தகவல் தொடர்புச் சாதனங்கள்; பத்திரிகைகள் போன்ற கட்புல சாதனங்களாகவும் வானொலி போன்ற செவிப்புல சாதனங்களாகவும், தொலைக் காட்சி போன்ற கட்புலமும் செவிப்புலமும் இணைந்த சாதனங்களாகவும் இன்று காணப்படுகின்றன. செக்கோஸ்லாவியாவில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம், செவிப்புலன் மூலமாக 11வீத மானோரும் கட்புல, செவிப்புல இணைந்த சாதனங்கள் மூலமாக 93 வீதமானோரும் அறிவு பெறுவதாக காணப்படுகின்றது. மேலும், கேட்கும் தகவல்களில் 20வீதம் மனதில் பதிவதாகவும், கேட்பதிலும் பார்ப்பதிலுமான தகவல்களில் 50வீதம் உம் மனதில் பதிவதாகவும் இவ்வாய்வு கூறுகிறது.

கட்புல, செவிப்புல சாதனங்களின் வளர்ச்சி இன்று வீடியோ சஞ்சிகைகளின் வரை உருப்பெற்றிருக்கிறது. சாதாரண சஞ்சிகைகளில் காணப்படும் பல்வேறு அம்சங்களை தாங்கி வரும் அதே பாணியில், வீடியோ சஞ்சிகைகளும் Video Magazines

பல்வேறுபட்ட தகவல்களையும் செய்திகளையும் கொண்டு உருவாகின்றன. இவ்வகையில் தமிழீழத்தின் முதலாவது வீடியோ சஞ்சிகையான ''ஒளி வீச்சு'', நிதர்சனம் நிறுவனம் மூலம் தற்போது வெளிவந்து கொண்டிருக்கிறது.

தொழினுட்ப ரீதியலான வசதிகள் மிகக் குறைந்த இக்காலப் பகுதியில், போராளிகளினதும் ஆர்வலர்களினதும் ஆற்றலின் வெளிப்பாடாக, தனது நான்காவது வெளியீட்டையும் கடந்த வாரம் நிதர்சனம் வெளியிட்டுள்ளது. கடந்த வைகாசி மாதம் தனது முதலாவது வெளியீட்டை ஆரம்பித்து மாதாந்த ரீதியாக ஆவணிமாத சஞ்சிகை வரை ஒளிவீச்சு வெளிவந்துள்ளது.

ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை தாங்கி வரும் அம்சங்களைக் கருதின்,

குறித்த மாதப் பகுதியில் தமிழீழத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளையும் செய்திகளையும் கொண்டு செய்திச்சரம் எனும் பகுதி அமைகிறது. களத்தில் நேரடியாக பதிவு செய்யப்பட்ட போராட்டச் செய்திகள் உள்ளடங்கிய உள்நாட்டுச் செய்திகள் இதில் இடம்பெறுகின்றன. இறுதியாக வெளிவந்துள்ள ஒளிவீச்சு சஞ்சிகையில், கடந்த ஆவணிமாதத்தில் காவியமான கடற்கரும்புலிகளுடனான இறுதி நிமிடங்கள் எனும் பகுதி விசேடமாக வெளிவந்துள்ளது.

**ரகுராம்**

மாவீரர் நினைவு என்னும் பகுதியில் குறிப்பிட்ட மாதப் பகுதியில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவுப்படங்களும், அவர்தம் அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

மண்ணும் மக்களும் என்னும் பகுதியில் மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தமிழீழ மண்ணில் நடைபெறும் விசேட விழாக்கள் என்பவை பற்றிய தகவல்கள் போன்றன காட்சிப்படுத்தப்படுகின்றன.

நோய்கள் பற்றிய விளக்கங்களும், தடுப்பு முறைகள், சிகிச்சைகள் போன்றன மருத்துவப்பகுதியில் இடம்பெறுகின்றன.

விளையாட்டுப் பகுதியில், தமிழீழத்தின் பல பாகங்களிலும் நடைபெறும் விளையாட்டுக்கள் பற்றிய செய்திகளும், புதிய வெளியீடுகள் எனும் தலைப்பின் கீழ் குறிப்பிட்ட மாதப்பகுதியில் புதிதாக வெளி வந்த நூல்கள், சஞ்சிகைகள் பற்றிய அறிமுகங்களும் இடம்பெறுகின்றன.

தமிழீழ மக்களின், கலை, பண்பாட்டு விளக்க கோலங்களும், விசேடமாக இடம் பெற்ற கலை நிகழ்வுகளும் கலையும் மக்களும் என்னும் பிரிவில் அமைகின்றன.

இறுதிப் பகுதியாக குறும் படங்கள், விவரணங்கள் என்பன இடம் பெறுகின்றன. வைகாசி மாத வெளியீட்டில் கண்ணீர் எனும் குறும்படமும், ஆடி மாதம் வெளியீட்டில் நேற்று எனும் குறும்படமும், இறுதியாக வெளிவந்த ஒளிவீச்சு சஞ்சிகையில், லெப். சீலன், இறுதிக் கணங்களை நினைவு கூறும் வீர சீலம் எனும் குறும்படமும் வெளிவந்துள்ளது. ஆனி மாத வெளியீட்டில், மடு அகதி முகாம் மக்கள் பற்றிய விவரணத்தைக் DOCUMENTARY காட்சிப்படுத்தியுள்ளார்கள்.

இவற்றுள் கண்ணீர் எனும் குறும்படமும், உரையாடல்களற்ற நிலையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி உணர்த்தும் வகையிலமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது

சராசரியாக 75 நிமிடங்களை கொண்டுள்ள ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகைகள், தமிழீழத்தின் பின் தங்கிய கிராமப் பகுதிகளில் கொண்டு செல்லப்பட்டு திரையிடப்படுகின்றன. இவ் வீடியோ சஞ்சிகைகளை, தனிப்பட்டவர்கள் காண்பதற்கேற்ப வகையிலும் வழங்கப்பட்டு வருகின்றன இவற்றை விட, தமிழீழ நிகழ்வுகளை அறிந்து கொள்ளும்பொருட்டு, தமிழர் வாழும் பிறநாடுகளுக்கும் ஒளி வீச்சு வீடியோ சஞ்சிகைகள் அனுப்பப்பட்டு வருகின்றன.

தகுந்த கருவிகளின்றியும், சிறப்பாக உருவாக்கப்பட்டு வெளிவரும் இவ் வீடியோ சஞ்சிகை போராளிக் கலைஞர்களின் ஆற்றல்களாலும் திறமைகளாலும் மென்மேலும் மெருகடையும் என்பதில் ஐயமில்லை.

# குடும்பப்பதிவு அட்டை வழங்குவதற்கான அலுவலகங்கள் திறப்பு

பொது மக்களின் வசதி கருதியாழ்மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய கோட்டங்களுக்கான குடும்பஅட்டைபகுதிஅலுவலகங்கள் 11 10,93 திங்கட்கிழமை திறக்கப்பட உள்ளது. வலிகாமக் கோட்டத்தில் கோண்டாவில் புகையிரத நிலைய வீதியிலும் (அவசர அனுமதி வழங்கும் விசாரணைச் செயலகத்திற்கு அண்மையிலும்), வடமராட்சியில் மாலிசந்திஅலுவலர்களுக்கான அனுமதி வழங்கும் செயலகத்திலும், தென்மராட்சியில் சாவகச்சேரி அவசர அனுமதிவழங்கும் செயலகத்திலும் கிழமை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30மணி வரையும், சனிக்கிழமைகளில் 8.30 மணி தொடக்கம் 1.00 மணி வரையும் செயலகங்கள் இயங்கும்.

பொதுமக்கள் குடும்பப் பதிவு அட்டைக்கான விண்ணப்பங்களை அந்தந்தப் பகுதி வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான விண்ணப்பப்படிவம் விற்பனை செய்யும் நிலையங்களிலும் குடும்பபதிவு அட்டை அலுவலகங்களிலும் பெற்று முறையாகப் பூர்த்தி செய்து தத்தமது வதிவிடக் கிராமசேவகரிடம் உறுதிப் படுத்திய பின்னர் மேற்குறிப்பிட்ட குடும்ப அட்டைப் பதிவு பகுதி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். குடும்பப் பதிவு அட்டைகள் இவ் அலுவலகத்தின் ஊடாக வழங்கப்படும்.

கோண்டாவிலில் அமைந்துள்ள குடும்பப் பதிவு அட்டை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

வேலணை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய்.

**வடமராட்சியில்**

மாலிசந்தி அலுவலகத்துடன் தொடர்புகொள்ள வேண்டியவர்கள் கீழ்க்கண்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாகஇருக்கவேண்டும்;

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி.

**தென்மராட்சியில்**

சாவகச்சேரி அலுவலகத்துடன் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்:

சாவகச்சேரி, பளைப்பகுதி புதிதாக மணம்முடித்த குடும்பத்தினர் தாம் வசிக்கவுள்ள பகுதி அலுவலகத்தினூடாக புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்துப் பெற உரித்துடையவர்களாவர்.

இதுவரை காலமும் ஏதேனும் காரணங்களிற்காக முழுமையான சரியான பதிவுகளைக் கொண்டிராதவர்கள் இவ் அலுவலகங்களினூடாக தத்தமது குடும்ப அட்டைகளிற்குரிய சரியான பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**குடும்பப் பதிவு அட்டை சம்பந்தமான அறிவுறுத்தல்கள்:**

01. இதுவரை காலமும் குடும்பப்பதிவு அட்டை பதியத் தவறியவர்கள் தமது பகுதி குடும்ப அட்டைப்பதிவு அலுவலகருடன் தொடர்பு கொண்டு இதுவரை பெற்றுக் கொள்ளாததற்கான காரணத்துடன் அட்டையில் பதியப்பட வேண்டிய சகல விடயங்களையும் விண்ணப்பப்படிவத்தில் எழுதி தமது பகுதி கிராம அலுவலகரிடம் உறுதிப் படுத்தி குடும்பப்பதிவுஅட்டை அலுவலகத்தில் ஒப்படைத்து அந்த செயலகத்தில் வைத்து புதிய அட்டை வழங்கப்படும்.

குறிப்பு:

புதிதாக வடபகுதிக்குள் வந்த குடும்பங்கள் அல்லது தனிநபர்களாயின்உரிய விபரங்களுடன் வடபகுதிக்குள் நுழைவோரிற்கான பயண அனுமதி அட்டையினையும் சேர்த்து விண்ணப்பிக்கவேண்டும்.

02) (அ) ஒரு குடும்பம் குடும்பப் பதிவு அட்டையில் பதியப்படும்போது, தவறாது மணமாகாத உறுப்பினர்கள் அனைவரும் பதியப்பட வேண்டும். ஏதேனும் காரணங்களால் வடபகுதிக்கு வெளியே வசிக்கும் குடும்ப உறுப்பினர் பதியப்படாமல் விடுபட்டு இருப்பின் அவ்வுறுப்பினரின் பெயர், பிறந்த ஆண்டு, உறவுமுறை, தேசிய அடையாளஅட்டை இலக்கம்' தொழில், தொழில் இடம் ஆகியவற்றை எழுதி குடும்பப் பதிவட்டையுடன் கிராமஅலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைக் குடும்ப அட்டைப் பதிவுப் பகுதி அலுவலகத்தில் கையளித்தால் அவ்வுறுப்பினரும் சேர்க்கப்பட்டு முன்னர் விண்ணப்பப் படிவம் கையளிக்கப்பட்ட அலுவலகத்தில் குடும்பப் பதிவு அட்டை மீள வழங்கப்படும்.

(ஆ) புதிய பிறப்புக்கள், இறப்பு விபரம் சேகரித்தல், திருத்தம் செய்தல் போன்ற காரணங்களுக்குக் குடும்பப் பதிவு அட்டையுடன் மாற்றம் சம்பந்தமான விபரத்தைக் கிராமசேவகர் மூலம் உறுதிப்படுத்திய விண்ணப்பப் படிவத்தினை குடும்ப அட்டை பகுதி அலுவலகத்தில் கையளித்தால் குறிப்பிட்ட மாற்றங்கள் பதிந்து தரப்படும்.

(4ஆம் பக்கம் மார்க்க)

# பாலர் பாடசாலை கல்விப் பிரச்சினைகள்

பாலர் பாடசாலைகளுக்குச் சிறுவர்களின் உடல், உள்ளம், உணர்வுகள் சம்பந்தப்பட்ட வளர்ச்சியில் பெரும் பங்கு உண்டு. அத்துடன் பாலர் பாடசாலைகள் எமது சிறார்களின் கல்வி அபிவிருத்தியினதும், வளர்ச்சியினதும் படிமுறையாகும். கல்வியின் பலாபலன்கள் மட்டுமல்லாமல் படிமுறையும் முக்கியமானது. பாலர் கல்வியின் நோக்கத்தின் தடம் இப்பாடசாலைகளில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் இத்தகைய பாடசாலைகள் பல சிறுவர் கல்வியின் குறிக்கோளிலிருந்து மாறுபட்டிருப்பது விசனத்திற்குரியது. ஒரு வேளை வெளிப் பார்வைக்கு எப்படிப்படுகிறதோ என்னவோ, பாலர் பாடசாலைகளின் கல்விச் சூழல் குழம்பியிருப்பது இன்னும் உணரப்படவில்லை. நேற்றிருந்த - இன்றிருக்கிற அரசின் கல்விக் கொள்கைகளும் இதற்கான காரணமாகும். பாலர் பாடசாலையிலிருந்து உயர் கல்வி வரை நம் கல்விமுறை முழுவதையும் இக்கொடுமை பாதித்திருக்கிறது.

### யாழ். மாவட்டத்தில் பாலர் பாடசாலைகள்

மரியா மொண்டசூரி அம்மையாரால் (1870 - 1952) அறிமுகப்படுத்தப்பட்ட மொண்டசூரி என்ற பாலர் பாடசாலைகள் 393 யாழ் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இதில் ஆகக் கூடிய பாடசாலைகள் 64 வலிகாமம் மேற்கிலும், குறைந்தபட்சம் பாடசாலைகள் 12 வலிகாமம் வடக்கிலும் உள்ளன. மொத்தத்தில் 166 பாலர் பாடசாலைகள் சனசமூக நிலையங்களால் நடத்தப்படுகின்றன. 1992 டிசம்பர் முடியும்வரை யாழ் மாவட்டத்தில் பாலர் பாடசாலைகளில் அனுமதி பெறத் தகுதி பெற்ற சிறுவர்களின் எண்ணிக்கை 63,000 பேர். ஆனால் அனுமதி பெற்றவர்கள் தொகை 11,049. வீட்டில் கற்கும் வசதி, சமூக பொருளாதார அந்தஸ்து, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நிலை மற்றும் பின்தங்கிய கிராமங்களில் பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படாத இன்னோரன்ன காரணங்களால் சுமார் 52,000 சிறுவர்கள் பாலர் பாடசாலைகளை நாடவில்லை என்பதை அனுமானிக்க முடிகிறது.

3 முதல் 5 வயதுக்கிடையில் உள்ள சிறுவர்கள் பாலர் கல்வி பெற உரிமையுள்ளவர்கள். சமுதாய ரீதியில் அல்லது பொருளாதார வகையில் பின்தங்கிய பெரும்பாலான கிராமங்களில் சிறுவர் பாடசாலைகள் அமைக்கப்படவுமில்லை. அவற்றின் முக்கியத்துவம் உணரப்படவுமில்லை. ஆகவே பாலர் பாடசாலைகள் அமைக்கும்போது வசதியற்ற கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் அவசியம்.

உள்ளூராட்சி மன்றங்கள், சனசமூக நிலையங்கள், தனியார், மகளிர் அமைப்புக்கள், மதம்சார் நிறுவனங்கள் ஆகிய பல்வேறு நிறுவனங்களால் பாலர் பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. போரூட், சர்வோதயம் ஆகிய மனிதநேய நிறுவனங்களும் பாடசாலைகளுக்கு உதவி வருகின்றன. அடிப்படையில் சிறுவர் கல்வியை மையமாகக் கொண்டு பாலர் கல்வி நிலையங்கள் இயங்கி வந்தாலும், நடத்துகின்ற நிறுவனங்களின் நோக்கங்களுக்கேற்பப் பாலர் பாடசாலைகள் வேறுபட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

தனியார் நடத்தும் சில பாலர் பாடசாலைகள் தொழில்துறை அடிப்படையிலேயே நடத்தப்படுகின்றன. ஆனால் புனிதர்களின் பெயரால் இயங்கும் மதம்சார் நிறுவனங்களின் பாலர் பாடசாலைகளில் சில 'எழுதா யாப்பாக, அனுமதிக்கு 1000ரூபா வரை அல்லது அதற்கு மேல் வசூலிப்பது நம்மைப் பிரமிப்படையச் செய்கிறது. 'தலைசிறந்த' கல்வியை அளிப்பதாகக் கூறும் இப் பாலர் பாடசாலைகள், ஏழைச் சிறுவர்களைத் தமது இராச்சியத்துக்குள் அனுமதிப்பதில்லை. WILD WEST நாவல்களின் ஆசிரியரான லூயி லாமுரின் 'ஓர் நடோடியின் படிப்பு' தான் ஏழைகளுக்கு உரியதாக்கும்.

> **1987 — அரசியல் யாப்பு 13-வது திருத்தத்தின்படி பாலர் பாடசாலைகள் [PRE - SCHOOL] மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. இதனைப் பிரதேச சபைகள் கவனிப்பதா, கல்வித் திணைக்களம் கவனிப்பதா என்பதில் இழுபறி. இந்த இழுபறியில் பாலர் பாடசாலைகள் திரிசங்கு சொர்க்கத்தில்.**

### பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி

பாலர் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் 338 பேர் பயிற்றப்பட்டவர்கள். 177 பேர் பயிற்சி அற்றவர்கள். பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அவசியம் என்பதை உணர்ந்து சுமார் இருபது வருடங்களுக்கு முன் அதை வழங்கிய முன்னோடி திரு. ந. கந்தசாமி (புதுமைலோலன) இது இன்று பயிற்சித் திட்டம் வழங்குபவர்களுக்கு அசை போடத்தக்க செய்தி.

பயிற்சியும்இன்றுவரையறை அற்ற முறையிலேயே வழங்கப்படுகிறது. பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி இரண்டு மூன்று கிழமைகள் அல்லது ஓரிரு மாதங்கள் என்ற மிகவு குறுகிய கால எல்லைக்குட்பட்டதாகும். இந்தக்கால எல்லைபோதாது. ஒரு பொதுவான காலத்திட்டம் இல்லாமல் செயலூக்கமற்ற முறையில் பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சிபெறாத ஆசிரியர்கள் கற்பிப்பது சிறுவரின் ஆற்றலைக் குறைக்கவே செய்யும். பயிற்சியினால் ஆசிரியர் தம்மை வழிப்படுத்தவும் முடியும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால்தான் பிள்ளைகளுக்குப் பயன் பொருத்தமான பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

### தனியார் பாலர் பாடசாலைகள்

தனியார் பாலர்பாடசாலைகளை அமைத்து நடத்த எவ்வித தடையும் இல்லை. இதனால் மழைக்காளான் பாலர் பாடசாலைகள் பல. ஒரு 'பிசினஸ்' ஆகவே பாலர் கல்வி நிலையங்கள் தொடங்கியிருப்பதையும் காணலாம். பெரும்பாலும் நகரங்களைச் சேர்ந்த இக் கல்வி நிலையங்களில் மேல் தட்டு வர்க்கச் சிறுவர்களே அதிகம் சேர்கின்றனர்.

வீட்டுத்திண்ணை அல்லது தாழ்வாரத்தில் அமைந்த வகுப்புகள், போதிய வசதி இல்லாத அறைகள், கார் கராஜ்கள் - இவைதான் தனியார் பாலர் பாடசாலைகள். இலட்சணமான பெயர்ப் பலகைகள் மாத்திரம் வரவேற்கும். வசதியான வீட்டுப் பின்னணி கொண்ட வசதியுள்ளவர்களும் பாடசாலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். குறிக்கோள் பணம் சேர்ப்பது ஒன்றுதான். இவர்களிடம்சேவைஉணர்வை எதிர்பார்ப்பது காளை மாடு பால் கறக்கும் என்றுஎதிர்பார்ப்பதைப் போன்றுதான்.

### பாலர் பாடசாலை வளங்கள்

இந்த இடத்தில் பாலர்பாடசாலைகளின் பௌதிக வளங்கள் பற்றிக் கொஞ்சம் சொல்லியாக வேண்டும். யாழ்மாவட்டத்தில் இயங்கும் 393 பாலர் பாடசாலைகளில் கற்பித்தல் உபகரணங்கள் 136 பாடசாலைகளிலும், விளையாட்டு உபகரணங்கள் 114 பாடசாலைகளிலும்தான் உள்ளன. பிள்ளைகளிடம் இயல்பாக உள்ள விளையாட்டு நாட்டம், பாவனைப்பற்று, கற்பனையாற்றல் ஆகியவற்றை வளர்ப்பதற்கு கற்பித்தல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் முக்கியமானவை.

சிறுவர் விளையாட்டுகளில் இயல்பான நாட்டம் கொண்ட மனப்போக்குடையவராவர். இவர்களது விளையாட்டு நாட்டத்தைக் கற்றலுக்கு பயன்படுத்தலாம். ஆகமொத்தம்193 பாலர் பாடசாலைகளில்தான் விளையாட்டு மைதானங்கள் உள்ளன. இதில் விசேடம் என்னவென்றால், விளையாட்டுப் போட்டிகளுக்குக் குறைவில்லை. 265 பாலர் பாடசாலைகள் விளையாட்டுப்போட்டிகளையும், 250 பாலர்பாடசாலைகள் கலைநிகழ்ச்சிகளையும் எப்படியாவது நடத்தி முடித்து உள்ளன. இது இப்படியிருக்க, அநேகமான பாலர் பாடசாலைகளில்அடிப்படைச் சுகாதார சேவைகள் பேணப்படுவதில்லை. சரியான மலசலகூட வசதிகள் இல்லை மலசலகூட வசதிகள் இல்லாத காரணத்தால்நெருப்புக்காய்ச்சல், வாந்தி பேதி ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் பற்றிப் பேசப்பட்டபோதிலும், 153 பாலர் பாடசாலைகள் மலசலகூட வசதிகள் இல்லாதவை. மேலும் மலசலகூடத்தின் தேவை பற்றிச் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

### ஆசிரியர் சம்பளம்

பாலர் பாடசாலைகளில் கடமையாற்றும் 338 பயிற்றப்பட்ட, மற்றும் 177 பயிற்றப்படாத ஆசிரியர்களில் பலர் 15 வருடங்களுக்கு மேலாகச் சேவையில் உள்ளனர். இவர்களில் 12ஆசிரியைகளைத்தவிர ஏனையவர்களுக்கு நிரந்தர நியமனம்வழங்கப்படவில்லை. இந்தப் பன்னிரண்டு பேருக்கு மாத்திரம் மாதம் ஒன்றுக்கு 1375 ரூபா அடிப்படைச் சம்பளமும், 800 ரூபா படியும் வழங்கப்படுகிறது. தொழிற்சங்கப் பரிபாஷையில் சொல்லப்போனால், மற்றவர்களின் உழைப்புச் சுரண்டப்படுகிறது என்றுதான் அர்த்தம்.

1991இல்யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 10 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதம் 1000ரூபா படியும், 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றியவர்களுக்கு 500ரூபாவும், 5 வருடங்களுக்கு குறைவான அனுபவம் உடையவர்களுக்கு 250 ரூபாவும் 1-4-91 முதல் படியாக வழங்கும்படிபணிக்கப்பட்டது. இந்தப் பணிப்புரை பிரதேச சபைகள், நகரசபைகள் நடத்தும் பாடசாலைகள் தவிர மற்றப் பாடசாலைகளைக் கட்டுப்படுத்துவது சந்தேகமே. மேலும் உள்ளூராட்சி மன்றங்களில் நிதி இருந்தால்தான் இந்தச் சம்பளம். பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும்!

### தொழில் வாய்ப்பும் நிதி உதவியும்

1991, 92இல் அரசு ஆசிரியர் நியமனம் வழங்கியபோது பாலர் பாடசாலை ஆசிரியர்களில் தகுதி உடையவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும்படி யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தினால் இவர்கள் சார்பில் கோரிக்கை விடப்பட்டது. எழுதுவினைஞர் நியமனத்தின் போதும் இத்தகைய கோரிக்கை விடப்பட்டது. ஆனால், வடக்கு - கிழக்கு மாகாண சபை இக்கோரிக்கைக்குச் செவி சாய்க்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இவை தவிர, பாலர் பாடசாலைகளுக்கு அரசு நிதி அளிப்பதில்லை, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் பாடசாலைகள் சுய நிதிப் பாலர் பாடசாலைகளாகவே பெரும்பாலும் இயங்குகின்றன.

1989, 1990, 1991 காலப் பகுதியில் யாழ். உள்ளூராட்சித் திணைக்களம் கற்பித்தல் உபகரணங்களுக்கு 2 லட்சம் ரூபாவும், தளபாடம் மற்றும் கட்டடங்களுக்கு என 10லட்சம் ரூபாவும் செலவு செய்து உள்ளது. இனி, வலிகாமம் மேற்கு பிரதேச சபைப் பிரிவில் உள்ள பாலர் பாடசாலைகளுக்குத் தளபாடத்துக்கென 1992இல் 50,000ரூபா வழங்கப்பட்டது இதேபோல் வடமராட்சி தென்மேற்கிற்கு பாலர் பாடசாலைக் கட்டடத்துக்கென ஒரு லட்சத்து 57 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டது. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கும் பாலர் பாடசாலைக் கட்டடம் மற்றும் தளபாடத்துக்கென 68,000 ரூபா 1992இல் வழங்கப்பட்டது. இங்கு பட்டியலிட்டுக் காட்டியுள்ள நிதி, உதவி தேவையைக் காட்டிலும் குறைவு என்பது தெரிகிறது. பாலர் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படும் இச் சிறிய தொகையை நோக்கும் போது பாலர் பாடசாலைகளின் இன்றைய குழம்பிய நிலைக்கு நிதி உதவியையும் ஒரு காரணமாகக் காட்டுவது உண்மைக்கு மாறாகாது

இவ்வாறு பாலர் பாடசாலைகள் ஏன் புறக்கணிக்கப் படுகின்றன? மையப்படுத்தப்பட்ட திட்டமின்மை, நிதி ஒதுக்கீடு, வளக்குறைவு, வருவாய் நோக்கில் நடத்தல், நமது கல்வித் திட்டங்கள் என்று பதில் சொல்லலாம். இது ஒரு பக்கம் என்றால் இதற்கு நேர் எதிர்மாறான வேறோர் காரணம். 1987அரசியல் யாப்பு 13ஆவது திருத்தத்தின்படிபாலர் பாடசாலை (PRE SCHOOl) மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்டது. இதனால் பிரதேச செயலகம் கவனிப்பதா, கல்வித் திணைக்களம் கவனிப்பதா?என்பதில் இழுபறி இந்த இழுபறியில் பாலர் பாடசாலைகள் திரிசங்கு சொர்க்கத்தில். இந்நிலை நீடித்தால் குழந்தைகளுக்கு மட்டுமல்ல முழுச்சமுதாயத்திற்கும்பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

(இக் கட்டுரையில் கையாளப்பட்ட புள்ளி விபரங்கள் 1992 இல் சேகரிக்கப்பட்டதரவுகளிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன)

**மதன்**

# யாருடைய நிலம்

1788இல் பிரித்தானியர் வருமுன், யாரும் அவுஸ்திரேலியாவில் வசிக்கவில்லை என்று சட்ட நூல்கள் கூறுகின்றன. பழங்குடி மக்கள் தவிர வேறு யாரும் இல்லை. 1982இல் எடிமாபோ என்ற மெரியம் மக்களினத் தலைவர் அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்தார். ரோறெஸ் நீரிணையில் உள்ள மோரே தீவுகள் தம்மெரியம் இனத்தவருக்கே உரிமையுடையவைஎன்று வாதாடினர். 1992 ஜூனில் உயர் நீதி மன்றம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஒன்றை வழங்கியது அத்தீவில் உள்ள நிலங்களிற்கு உரிமை கொண்டாடவும், குடியிருக்கவும், பயன்களை அனுபவிக்கவும் உரித்துடையவர்கள் அப்பழங்குடி மக்களே எனத்தீர்மானித்தது. மாபோவின் கனவு நனவாயிற்று. நீதி மன்றத் தீர்ப்பின் பாதிப்புகள் பற்றி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் வேறுபல இனக்குழுக்கள் பல்வேறு வழக்குகள் மூலம் தமது மண்மீது தமக்குள்ள உரிமையை நிலைநாட்ட முன்வந்தன. மாபோவின் விதவை மனைவி பொனெற்றா கூறுகிறார் :

''அவர்கள் கொஞ்சம் அவசரப்படுகிறார்கள், அதிகம் எதிர்பார்க்கிறார்கள், அதி விரைவில் பெற ஆசைப்படுகிறார்கள்'' கன்பெரா (தலைநகர்) முழுவதுக்கும் ஒருஇனக்குழு உரிமை கோருகிறது. மேற்கு அவுஸ்திரேலியாவில் மோவஞ்சும் இனம் கோரும் உரிமையே இது வரையில் மிக அதிகப் பரப்புடையது. (கிம்பாளிப் பிரதேசத்தில் 220,000 ச. கி. மீ.) வர்த்தகத் துறையினர் சுரங்கத் தொழில் பாதிக்கப்படும் என அஞ்சுகிறார்கள் கிம்பாளியில் பெரிய மாட்டுப் பண்ணையரான டேவிட் ஹமான் தமது பண்ணையின் நிலப் பகுதி பழங்குடியினருக்கு வழங்கப் பட்டதையடுத்து வெளியேறியுள்ளார். வரலாறு ஏதோ ஒரு வகையில் மீண்டும் மீண்டும் திகழ்கிறது.

நன்றி: ஏசியன் வீக்

# குழந்தையின் போசாக்கு

செல்வி த. குமரகுருநாதன்
யாழ். மருத்துவபீடம்

தாய் சேய் ஆகியோரின் போசாக்கு நிலைமை ஒரு நாட்டின்சமூக பொருளாதார நிலைமையைப் பிரதிபலிப்பதாக உள்ளது. ஆயினும் போசாக்குப் பற்றிய அறிவு, சக்தித் தேவைகள், உணவுப் பங்கீடும்விநியோகமும், பொருளாதார நிலைமை, ஆகியவை தனி நபரின் போசாக்கு நிலையை நிர்ணயிக்கின்றன.

ஆரோக்கியமான குழந்தையை உருவாக்குவது ஒவ்வொரு தாய்மாரினதும் முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். ஆண், பெண் என்ற வேறுபாடில்லாமல் இருபாலாரிற்கும் ஒரேவகையான உணவு குறிப்பிட்ட மாதங்களில் கொடுக்கப்படல் வேண்டும். ஆறு மாதத்தில் சோறு கொடுத்த பின் தான் வேறு உணவுகள் வழங்க வேண்டும் என்ற பழைய நம்பிக்கைகளை கை விட்டு குழந்தையின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான உணவுகளை அவ்வப் பருவங்களில் வழங்குதல் வேண்டும். ஏனெனில் உடலின் போசாக்கு நிலைமை குறையும் போது நோய்க்கிருமிகளின் தாக்கமும் அதிகரிக்கின்றது. அதேவேளை ஊட்டச்சத்து நிறைந்த குழந்தை நோய்க் கிருமிகளை எதிர்க்கும் வல்லமையைப் பெற்றுக் கொள்ளுகிறது.

போசாக்கை கருத்தில் கொள்ளும்போதுமுதல் மூன்று மாதங்களிற்கு குழந்தையின் ஒரு கிலோ எடைக்கு 120 கி. கலோரி சக்தி வீதம் தேவைப்படும். 4—6 மாதங்களிற்கு 1கிலோ நிறைக்கு115 கி. கிராமும், 7—9 மாதங்களிற்கு 1 கிலோ கிராம் நிறைக்கு 110 கி. கலோரியும் 10—12 மாதங்களிற்கு 1 கி. கிராம் நிறைக்கு 105 கி கலோரி சக்தியும் தேவைப்படுகிறது. இனி உணவின் கூறுகளைப் பார்க்கும் போது புரதச் சத்து முக்கியத்துவம் வகிக்கிறது. வளர்ந்த ஒருவரின் 1 கி. கி. எடைக்குத் தேவையான புரதத்திலும் பார்க்க, குழந்தைக்குத் தேவையான புரதம் அதிகமாகும்.

கருப்பையில் சிசு உற்பத்தி ஆரம்பமாகும் போது ஆரம்பிக்கும் மூளை வளர்ச்சியானது, முதல் மூன்று வருடங்கள் பூர்த்தியடையும் போது, பூரணமாகிறது. எனவே இத் தருணத்தில் தகுந்த சத்துத் தேவைகளை பூர்த்தி செய்யாதவிடத்து, குழந்தையின் மூளை வளர்ச்சி, உடல் வளர்ச்சி ஆகியன பாதிப்படைவதோடு, இது நிரந்தரமாகவே குறைபாட்டையும் ஏற்படுத்த வழிகோலும். எனவே காலம் கடந்து. இத் தேவைகளை வழங்குவதில் பயனில்லை.

எனவே 4—6 மாதங்களில் குழந்தையின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும், தாய்ப்பாலுடன், வேறு உப உணவுகளையும் அறிமுகப் படுத்துதல் அவசியமாகும். சராசரியான ஒரு போசாக்கான தாய்க்குப் பிறக்கும் குழந்தையின் பிறப்பு எடை 3. 3 கி.கிராமாக இருக்கும். இந் நிறையானது 6 மாதத்தில் இரு மடங்காகவும், ஒரு வருடத்தில் மூன்று மடங்காகவும் அதிகரித்தல் வேண்டும். இதைவிடுத்து, சில தாய்மார் தமது குழந்தையின் எடையை மற்றைய குழந்தைகளுடன் ஒப்பிட்டு பார்த்துக் குழப்பமடைவது வழக்கம்.

தாய்ப்பாலை கருத்தில் கொள்ளும் போது அது குழந்தைக்குத் தேவையான போசனை அத்தனையும் வழங்குகிறது. இதில் காணப்படும் கூறுகளாவன, புரதம் (1. 5 வீதம்), கொழுப்பு (3. 5 வீதம்), காபோவைதரேற்று (0. 7 வீதம்), கனிப்பொருள் (0. 2 வீதம்), நீர் (88வீதம்) அதேவேளை 1 மி. லீற்றர் பாலானது, 2. 9 கி. கலோரி சக்தியை வழங்குகிறது. இதிலுள்ள கொழுப்பு 50 வீதமான கலோரித் தேவையைப் பூர்த்தி செய்கிறது. அத்துடன் தாய்ப்பாலானது உகந்த உஷ்ண நிலையில் உள்ளதோடு நோய் எதிர்ப்புச் சக்திக் காரணிகளையும் கொண்டுள்ளது. இது குழந்தைகட்கு ஏற்படும் நெஞ்சுச் சளி, இருமல், வயிற்றோட்டம், சரும அலற்சி ஆகியவற்றைத் தடுக்கவல்லது. அத்துடன் இலகுவில் சமிபாடடையக் கூடியது.

எனவே ஒவ்வொரு தாயும் கர்ப்ப காலத்திலிருந்தே பாலின் உற்பத்தியைக் கூட்டுவதற்கான வழி முறைகளைக் கையாள வேண்டும். முக்கியமாக கர்ப்ப காலத்தின் இறுதிப் பகுதியில் சத்துள்ள சமவிகித உணவுகளை உண்ணுவதோடு, கர்ப்பகால மருத்துவ பரிசோதனைகளிற்கு ஒழுங்காகச் சென்று நிறை அதிகரிப்பு, மற்றும் பரிசோதனைகளையும் செய்து, தேவை ஏற்படின் சத்துக்குளிகைகளையும் பெற்று உபயோகிக்க வேண்டும். கர்ப்பிணித் தாய்க்கு, குழந்தைப் பேறுக்கு முன் 10—12கிலோ எடை அதிகரிப்பு இருத்தல் வேண்டும். குழந்தை பிறந்த பின்னரும் அவள் உணவில் கவனம் செலுத்த வேண்டும். அவளிற்கு கிட்டத்தட்ட மேலதிகமாக 500 கி. கலோரி வரை சக்தி தேவைப்படுகிறது. இவற்றைப் பெறுவதற்கு, இறைச்சி, மீன், கருவாடு, பால், எள்ளு, குரக்கன், பனங்கட்டி, தீட்டாத அரிசி, பருப்பு வகை, கீரை வகை, இலை சேர் பால்கஞ்சி முதலியவற்றை உட்கொள்வதோடு, நீராகாரங்கள் நிறைய அருந்த வேண்டும். எனவே போதியளவு பால் இல்லை என்ற நிலை உருவாகாது.

### பாலூட்டும் தாய்மார் கவனத்தில் கொள்ளவேண்டியவை:

★ குழந்தை பிறந்தவுடன் சுரக்கும் முதற்பால் குழந்தைகட்கு வழங்காமல் விடுதல் தவறு. முதல் 5 நாள் வரை சுரக்கும் பாலில் (கொலஸ்ரம்) புரதம், விற்றமின் A, கனியுப்புக்கள், நோய் எதிர்ப்புக் காரணிகள் ஆகியன அதிகளவு உண்டு. இதைக் கட்டாயம் வழங்க வேண்டும்.

★ பிறந்த குழந்தைக்கு அடிக்கடி பாலூட்ட வேண்டும். தொடர்ந்து குழந்தை பால் குடித்து வந்தால்தான் பால் சுரக்கும் தன்மை கூட்டப்பட்டு அதிகளவு பால் சுரக்கும்.

★ பால் வற்றும்வரை குழந்தையை உறுஞ்சிக் குடிக்க விடவும். ஆரம்பத்தில் வரும் பாலைவிட இறுதியில் வரும் பாலில் தான் கொழுப்புச் சத்து அதிகம் உண்டு.

சாதாரணமாக ஒரு நாளைக்கு 500 - 700 மி. லீ. வரை பால் சுரக்கிறது. இத்தன்மை 2 - 4 மாதங்களில் மேலும் கூடுகிறது. குழந்தையின் 1கி. கி. எடைக்கு ஒரு நாளைக்கு 150 மி. லீ. பால் தேவைப்படுகிறது. உதாரணம்: 3கி.கி. எடையுள்ள பிள்ளைக்கு ஒரு நாளிற்கு 450 மி. லீ. தேவைப்படும். எனவே 3 - 4 மணித்தியால இடைவெளியில் அடிக்கடி (6-7 தடவை) பாலூட்ட வேண்டும். வெப்ப காலங்களில் நீர்த்தேவை அதிகமாக இருக்கும். இக்காலங்களில் கொதித்துஆறிய நீரை இடையிடையே பருகக் கொடுக்கலாம். தாய்ப்பாலை 18 மாதங்கள்வரை அல்லது அதற்கு மேலும் கொடுப்பது நல்லது.

கிட்டத்தட்ட நான்கு மாதத்தை அண்மிக்கும் குழந்தைக்கு தாய்ப்பாலிலும் பார்க்க அதிகளவு போசனையும், புரதமும் தேவைப்படுகிறது. அதேவேளை 6 மாதத்தில் குழந்தை ஆபத்தான கட்டத்தை அடைந்துவிடும். எனவே தாய்ப்பாலுடன் உபஉணவுகளை அறிமுகப்படுத்த வேண்டும். திடீரென 6 மாதத்தில் புதிய உணவை அறிமுகப்படுத்தும் போது குழந்தை அதற்குப் பழக்கப்படாமல் இருக்கும். எனவே போசனைநிலை குழப்பப்பட்டுவிடும். ஆகவே சிறிது சிறிதாக 3-ம், 4-ம் மாதத்திலேயே வேறு உணவுகளை வழங்கவேண்டும். இத்தருணத்தில்தான் குழந்தைக்கு சுவையரும்பர்கள் விருத்தியடைகின்றன. எனவே குழந்தைக்கு சுவை மிகுந்த உணவை வழங்கும் போது பழக்கப்பட்டுவரும் சுவையரும்பர்கள் விருத்தியடைந்தபின் உணவுகள் வழங்கப்படும்போது அது அவற்றை வெறுக்கலாம்.

### உபஉணவுகள் பற்றி கவனிக்க வேண்டியவை:

★ பிறந்த ஆரம்பகாலத்திலேயே புதிய உணவுகள் வழங்க முற்படக்கூடாது அதே வேளை நிறை அதிகரித்த குழந்தையாயின் (6,7கி. கி.) 3 ம் மாதத்திலேயே ஆரம்பித்துவிடவேண்டும்.

★ உணவுகளைத் தெரிவுசெய்யும்போது ஒரு வகையான உணவையே கொடுக்கக் கூடாது. பல்வேறு வகையான உணவுகளைத் தெரிவுசெய்ய வேண்டும். (கீரைவகை, கிழங்குகள், பழங்கள், தானிய வகை, பருப்புவகை, மாமிச உணவு)

★ எல்லா உணவுகளையும் ஒரேநேரத்தில் கொடுக்க எத்தனிக்க வேண்டாம். சிறிது சிறிதாகக் கொடுத்து பழக்கப்படுத்த வேண்டும்.

★ தயாரிக்கும் உணவு செறிவானதாகவும் இலகுவில் சமிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

★ உணவு தயாரிக்கும்போது பாத்திரம், சேமிக்கும் இடம், பரிமாறும் பாத்திரம் முதலியன துப்பரவானதாக இருக்க வேண்டும். இலையான்கள் மொய்க்காதவாறு உணவை மூடிவைத்தல் வேண்டும். உணவு ஊட்டமுன் கைகளை சவற்காரமிட்டு நன்கு கழுவவும்.

★ கோதுள்ள பருப்புவகைகளை உபயோகிக்கமுன் அவற்றை ஊறவிடவும் பின் அவற்றினை சமைக்கும் போது கோதுகளை இலகுவாக நீக்கலாம். ஏனெனில் கோதுகள் குழந்தையால் சமிக்கப்பட முடியாதன.

★ பயறு, பருப்புவகைகளை ஊறவிடும்போதுஅவைமுளை கொள்ளுகின்றன. இவற்றில் இரும்புச்சத்து, விற்றமின்சீ, பீ ஆகிய சத்துக்கள் அதிகளவு உண்டு. அதேவேளை பருப்புவகையால் குழந்தைகட்கு ஏற்படும் வாயுப்பரிவையும் இச்செயன்முறை குறைக்கிறது.

குழந்தைகட்கு கொடுக்கக் கூடிய உப உணவுகளாவன:-

2-ம் மாதம்:- பழரசம் கொடுக்கலாம். கொதித்தாறிய நீர் சிறிதளவு எடுத்து (10-12 தேக்கரண்டி) அதனுள் 2—3 தேக்கரண்டி சீனிசேர்த்துப் பின் 1 தேக்கரண்டி எலுமிச்சம் சாறு சேர்த்து வழங்கவும். இதனுடன் 2-3 துளி மீனெண்ணெய் சேர்க்கலாம்.

3-ம் மாதம்:- அரை தேக்கரண்டி வாழைப்பழம் அல்லது பப்பாசிப்பழம்.

4-ம் மாதம்:- முட்டை அரை அவியலின் மஞ்சட்கரு அரை தேக்கரண்டி கொடுக்கத் தொடங்கி காலஞ் செல்லச் செல்ல அளவைக் கூட்டிச் செல்லலாம்.

5-ம் மாதம்;- மேற்குறிப்பிட்ட உணவுகளும் அரை கரண்டி வெள்ளைக்கரு சேர்க்கலாம்.

அதேவேளை சோறு வடித்த கஞ்சியுடன் (4 தேக்கரண்டி) சீனி, சிறிதளவு உப்புச் சேர்த்துக் கொடுக்கலாம். அல்லது தானியக்கலவை வழங்கலாம். ஜீவாகாரம்;-பொரியரிசி மா, கோது நீக்கி வறுத்த சோயா மா, உழுத்தம்மா ஆகிய மூன்று மாக்கலவையும் சேர்த்துஅதிலிருந்து 1—2 கரண்டி எடுத்து கொதித்தாறிய நீர் சேர்த்து களிபோல் செய்து வழங்கலாம். இவற்றுடன் பயறு, எள்ளு, தேங்காய்ப் பால் சிறிதளவும் சேர்க்கலாம்.

மேற்கூறிய உணவுகளை வழங்குவதுடன் படிப்படியாக பாலில் நனைத்த றஸ்க், பிஸ்கட் ஆகியவற்றை கொடுக்கலாம்.

மேலும் 'சூப்' தயாரித்து 2—3 தேக்கரண்டி வழங்கலாம். 'சூப்'பிற்கு வீட்டில் கிடைக்கும் பருப்புவகை ஒன்று, போஞ்சி, கரட், தக்காளி, கிழங்குவகை, கட்டாயமாக ஓர் இலைவகை சேர்த்து,அளவான நீர் விட்டு அவித்துஅதன் சாற்றை வழங்கலாம். விரும்பின் நெத்தலி, மீன், இறைச்சியும் 'சூப்'பிற்குள் சேர்க்கலாம்.

இல்லாவிடில் இலைசேர் பால்கஞ்சி தயாரித்து வழங்கலாம்.

6-ம் மாதம்:- சோறு கட்டாயமாக வழங்க வேண்டும். சோற்றுடன் கிழங்கு, கீரை அல்லது சூப்பிற்கு அவித்த மரக்கறி ஆகியவற்றை பிசைந்து கொடுக்கலாம் இவற்றுடன் தானிய உணவுக்களியை காலையும் மாலையும் வழங்கலாம்.

7-ம் மாதம்;- இடியப்பம், பாண் ஆகியவற்றை மிளகாய் சேராத வெள்ளைக் கறியுடன் அல்லது பாற்சொதி, பருப்பு, முட்டை, சிறிய மீன் ஆகியவற்றில் ஒன்றைச் சேர்த்து காலை, மாலை உணவாக வழங்கலாம்.

8-ம்மாதம்:-மேற்கூறியஉணவுகளை அவற்றின் அளவை அதிகரித்து வழங்குவதுடன் திரிபோஷாமா அல்லது அரிசிமா மூன்றில் இரண்டு பங்கு சோயா மா (மூன்றில் ஒரு பங்கு) சேர்ந்த கலவையை களிபோல் செய்து கொடுக்கவும்.

9-ம் மாதம்:- ஒவ்வொரு உணவாக ஒவ்வொரு மாதமும் அறிமுகப்படுத்தி, 9 ம் மாதமளவில் குழந்தை பெரியவர்கள் உண்ணும் உணவை உண்ணக்கூடியதாக இருக்கும் மிளகாய், கடினமான இறைச்சி போன்றவற்றைத் தவிர்க்கவும் இடியப்பம், பிட்டு, தோசை. பாண், பட்டர் முதலியவற்றுடன் பழவகையும் சேர்த்து வழங்கலாம்.

காலை 10 மணியளவில் பழரசம், மாலையில் ஏதாவது சிற்றுண்டி (களி) ஆகியன வழங்குவதுடன் தாய்ப்பாலை மூன்று வேளை மாத்திரம் கொடுத்தால் போதுமானது.

மேற்குறிப்பிட்ட மாதங்களில் மாத்திரம் அவ்வவ் உணவுகளை வழங்காது, படிப்படியாக அவ்வுணவுகளுடன் அடுத்தடுத்த மாத உணவுகளையும் சேர்த்து, இறுதியில் எல்லா உணவுகளையும் வழங்க வேண்டும்.

## இனிஎன்ன வேலை எனக்கு

ஓ
வீரனே,
உன்வாசம்
என்மனதில் நிழலாடுகின்றது.
உன் மூச்சு என்னுடன்
உறவாடுகிறது.
உன் சிரிப்பு
என்னைச்சிந்திக்கவைக்கிறது.
உன் உணர்வுகள்
ஒவ்வொன்றும்
என்னுடன்
பேசி விளையாடுகின்றன.
உன் உறுதி
என் மனதில்
உரம் போட்டுவிட்டது.
உன் வார்த்தைகள்
என்னைப் பேசவைக்கின்றன.
உன் கனவு
என் இதயப் புத்தகத்தில்
பொறிக்கப்பட்டுவிட்டது.
வீரனே !
இனி என்ன வேலை
எனக்கு ?
எதிரிக்குச் சமாதி
கட்டுவதே தான்.

-ந. சுதன்.

## விழித்தெழும் நேரம்

இது தூங்குகின்ற
இராப் பொழுதல்ல
அஸ்தத் மனங்களை
உதயமாக்க வென்று
விழித்தெழுகின்ற நேரம்

வீதியோரங்களில் விழுகின்ற
குண்டினை பொறுக்கி
எறிந்தவனுக்கு அதை
எப்படித் திருப்பி எறியலாம்
என்று
எண்ணுகின்ற நேரம்.

நீ பொங்கியெழுந்து
புறப்படு புறப்படு
புதிய விடியல் காண.

தம்பிகளும் தங்கைகளும்
தயக்கமின்றி புறப்பட்டபோது
நீ ஏன்
முடங்கிக் கிடக்கின்றாய்.

நித்திரைக்குப் புறப்பட்ட
சூரியனை நிறுத்தி
சுதந்திரகொண்டாட்டத்துக்கு
நாள்பார்க்கச் சொல்லுவோம்
புறப்படு புறப்படு
வீரனே விழித்தெழு
வெற்றியை வரித்திடு.

- கஸ்தூரி

நல்லூர் இளை நூல...
...மன்றம்
யாழ்ப்பாணம்



# ‘ஒப்பரேசன் யாழ்தேவி’ தோல்வி; திறந்த வெளிப் போரில் பலத்த அடி!

‘ஒப்பரேசன் யாழ் தேவி’ சிறிலங்கா இராணுவத்திற்கு எதிர்பாராத பெரும் தோல்வி ஒன்றைக் கொடுத்தது. ஒரு நாள் போரில் மட்டும் சுமார் 400 இராணுவத்தினரைக் களத்தில் இருந்து வெளியேற்றிய - கொல்லப்பட்டோ, அன்றி காயமடைந்தோ - இந் நடவடிக்கை இராணுவத் தரப்பிற்கு தோல்வி என்பதில் கேள்விக்கே இடமில்லை. ‘யாழ்தேவி’ இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினர் எதிர்பார்த்ததை விட பலமடங்கு அதிகமான இழப்புக்களை சந்திக்க வேண்டி இருந்ததாக இராணுவ வட்டாரங்கள் ஒப்புக் கொண்டதாக ‘சண்டே ரைம்ஸ்’ குறிப்பிட்டது.

இத்தோல்வியை ஒப்புக் கொண்ட ஓர் இராணுவ அதிகாரி ‘‘முன்னேறிய இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலால் பல்லாயிரக்கணக்கான சிப்பாய்களைக் கொ... ட இராணுவ அணி குழப்பமடைந்து சின்னாபின்னமாகியது. இதனால்படையணிஅல்லோலகல்லோல நிலைக்குத் தள்ளப்பட்டது’’ எனக்குறிப்பிட்டார்.


‘‘ஒப்பரேசன் யாழ் தேவி’ தோல்வியானது, கடந்தஆண்டின் ஆரம்பத்தில் மணலாற்றுப் பிரதேசத்தில், ‘ஒப்பரேசன் சிக்ஸர் இராணுவ நடவடிக்கையின் தோல்வியுடன் ஒப்பிடக் கூடியதாயினும் இச்சமரில் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட உயிர், மற்றும் தளபாடப் பொருட்சேதம் அதிகமானதாகும். அதாவது ஒப்பரேசன் சிக்ஸர் இராணுவ நடவடிக்கையும் ஒப்பரேசன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை போன்றே ஆரம்பத்திலேயே ஒரு அதிரடித்தாக்குதல் மூலம் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டது. ஆனால் அம்மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பை விட இவ் இழப்பானது மும்மடங்கானதாகும்.

இதேவேளை பெரும் சமர் என்ற ரீதியில் ‘ஒபரேசன் பலவேகய I’ இராணுவ நடவடிக்கையுடனும் இவ் இராணுவ நடவடிக்கை ஒப்பிடப்படுகின்றதாயினும் இவ் இரு சமர்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உண்டு. ‘பலவேகய 1’ நடவடிக்கையானது ஆனையிறவு இராணுவ முகாம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலையும், முற்றுகையையும்முறியடிக்கும் நோக்கில்அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைஆகும். அச் சமரிலும் சிறிலங்கா இராணுவம் தனது முப்படைகளின் பலத்தையும் முழுமையாகப் பயன்படுத்தியிருப்பினும் இன்றுள்ள பலமான நிலையில் முப்படைகளும் அன்று இல்லை. அன்று சுப்பர்சொனிக் விமானங்கள், புக்காரா விமானங்கள், எம்.ஐ -8 உலங்குவானூர்திகள், டாங்கிகளோபோர் முனையில் அறிமுகப்படுத்தப்படவில்லை.

இந்த ரீதியில் ‘ஒப்பரேசன் யாழ்தேவி’ பல வகையில் மாறுபட்டதாகும். இது மிகவும் இரகசியமாக நன்கு திட்டமிடப்பட்டு படையணிகள் ஒழுங்காகச் சேர்க்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். இச்சமரில் இராணுவம் தனது டாங்கிகள் உட்பட பல கனரக வாகனங்களையும் ஆகாயப்படையின் முழுப் பலத்தையும் பாவித்தது. அத்தோடு விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற போர் அனுபவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல் திட்டமானது இரண்டு இலக்குகளைப் பிரதானமாகக் கொண்டிருந்தது. ஒன்று யாழ். குடாநாட்டிற்கான தற்போதைய கடல் வழிப் பாதையான கிளாலிப் பகுதியை கைப்பற்றுதல். இதன் மூலம் யாழ். குடாநாட்டு முற்றுகையை தீவிரமாக்கல் அல்லது முற்றாக மூடிவிடுதல். இரண்டாவது விடுதலைப் புலிகளை திறந்த வெளியில் போருக்கு இழுத்து பெருமளவுஉயிர்ச் சேதங்களை ஏற்படுத்துதல் என்பன ஆகும்.

இவ்விரு நோக்கங்கள் குறித்தும் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வெளிப்படையாகவே இராணுவத் தரப்பில் பேசப்பட்டது. இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் நளின் அங்கமன ‘விடுதலைப் புலிகளை பகிரங்க வெளிக்களப் போருக்கு



இராணுவத் தளபதி
சிசில் வைத்தியரெத்தினா

அழைத்து வருவதே எமது நோக்கம். அவ்வாறுதான் மேற்படி பிரதேசத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிக்க முடியும்’ எனத் தெரிவித்தார்.

அத்தோடு ஒப்பரேசன் யாழ் தேவியின் பிரதான நோக்கம் கிளாலியைக் கைப்பற்றி யாழ்ப்பாண முற்றுகையை பலப்படுத்துவதே என்பது இராணுவ விமர்சகர்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்றாகவேஇருந்தது’ இதனால் இப்போருக்கு இராணுவ, அரசியல் ரீதியில் பெரும் முக்கியத்துவமும் வழங்கப்பட்டது.

இதேவேளை, இச்சமரானது விடுதலைப் புலிகளைப் பொறுத்தும் மிகவும் முக்கியமான சமர் என்பதில் சந்தேகம் எதுவும் இருக்கவில்லை. கிளாலியைக் கைப்பற்றி இராணுவம் நீண்ட காலம் வைத்திருப்பதென்பது ‘ஒப்பரேசன் வலம்புரி’- பூநகரி மூடப்பட்டது.- ‘ஒப்பரேசன் பலவேகய II’ -கொம்படி மூடப்பட்டது - ஆகிய இரண்டு நடவடிக்கைகளைவிட பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவே இருக்கும்.

இது குறித்து அரசியல் விமர்சகர்ஒருவர் கருத்து தெரிவிக்கையில் யாழ். நகருக்கான யுத்தத்தைவிட கிளாலிக்கான போர்முக்கியம்வாய்ந்த தென்றார்.

இவ்வாறானதொரு நிலையில் ஆரம்பிக்கப்பட்ட போரில், இராணுவத்தரப்பு தமது திட்டத்திற்கு ஏற்ப விடுதலைப் புலிகளைத் திறந்த வெளிச் சமருக்கு இழுக்கும் நோக்கில் போர் நடப்பதற்கான களத்தைத் தெரிவு செய்தது. ஆனையிறவு - இயக்கச்சி பகுதியில் இருந்து புறப்பட்ட இராணுவம் மரங்களும்அரண்களும் உள்ள பிரதான வீதி ஊடாக முன்னேறாமல், யாழ் குடாக்கடல் நீரேரியை அண்டியதாக திறந்த வெளி ஊடாக முன்னேறத் தொடங்கியது. இப்பகுதி சிறுபற்றைகளைக் கொண்டதாக ஓரளவு மணற் பாங்கான பகுதியாகவும் இருந்தது.

இதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு பேரிழப்பைஉண்டு பண்ணுவதே நோக்கமாக இருந்தது. கிளாலியின் முக்கியத்துவம் கருதி வெட்ட வெளியில் புலிகள் தம்மை சந்திப்பார்கள் எனவும் இராணுவ தரப்பில் கருதப்பட்டது. இந்நிலையில் விமானப்படையின் பலத்த தாக்குதல் மூலமும் பலமான பீரங்கிப் படைப் பிரிவினாலும் புலிகளுக்கு பெரும் சேதம் உண்டுபண்ணலாம் எனத் திட்டமிடப்பட்டிருந்தது.

மேலும்ஒப்பரேசன்பலவேகய 1 அனுபவத்தின் மூலம் மணற்பரப்பில்சலாடின், பவல் கவச வாகனங்கள் திறம்படச் செயற்படவில்லை என்பதை கண்டறிந்த இராணுவம் ஏற்கனவேபெற்றிருந்த டாங்கிகளையும் பயன்படுத்தின. இதன் மூலம் பலவேகய 1, 1992இல் மணலாற்றில் இடம்பெற்ற ஒப்பரேசன் சிக்சர் நடவடிக்கையின்போது இராணுவ முன்நிலை அணிகளுக்கு ஏற்பட்டது போன்ற உயிரிழப்பை தவிர்க்கலாம் எனவும் கருதப்பட்டது.

இவ்வாறாக இராணுவத்தரப்பு யுத்தத்திற்கான களத்தையும் போர் முறையையும் தெரிவு செய்த வேளை விடுதலைப்புலிகளும் புதிய போர் யுக்திகளை வகுத்துக் கொண்டனர், விடுதலைப்புலிகளின் போர்யுக்திகளும் கடந்த கால அனுபவத்தின் தொடர்ச்சியாகவே இருந்தது.

இராணுவம் திறந்த வெளிச் சமர் ஒன்றிற்கு தம்மை இழுக்க முற்படுவதை நன்கு விளங்கிக் கொண்டிருந்தமையால், பலவேகய I, 1991 ஒகஸ்டில் இடம்பெற்ற மணலாற்றுச் சமரான ஒப்பரேசன் மின்னல் என்பவற்றில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு பெரும்படை எடுப்பை மரபு வழி இராணுவமாகத் தடுத்து நிறுத்தி போரிடுவதிலும் பார்க்க அதிரடி மூலம் சிதைத்து விடுவதென்ற முடிவுடன் விடுதலைப்புலிகள் செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

கடந்த 28ஆம் திகதி ஒப்பரேசன்யாழ்தேவி ஆரம்பிக்கப்பட்டபோது விடுதலைப் புலிகள்பலத்தஎதிர்ப்பைக் காட்டவில்லை. சுமார்நான்கு கிலோமீற்றருக்குமேல்-புலோப்பளை வரை-இராணுவம்பெரும்எதிர்ப்பின்றி முன்னேறியது. ஆனால், அடுத்தநாட்காலை இராணுவம் முன்னேறத் தொடங்கி 500மீற்றர் நகரும் முன்னரே ஒரு பலமான அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. இராணுவத்தினருடன் மிகநெருக்கமாகநின்றுமோதிய விடுதலைப் புலிகள் இராணுவத்தின் முன்னணி நிலையை சிதறடித்தனர் இராணுவம் ஒரு கட்டத்தில் ஒரு கிலோமீற்றர்வரை பின்வாங்கி ‘ஓடியது.

இதேவேளை இராணுவத்தினரின் முன்னணி நிலையில்



நிறுத்தப்பட்டிருந்த சிறிலங்கா கவசப்படைப் பிரிவும், டாங்கிகளும் புலிகளின் டாங்கி எதிர்ப்பு பிரிவினரின் பலமான தாக்குதலுக்கு உள்ளாகியது. இச் சமரில் இராணுவம் தனது முன்னணி நிலையில் நிறுத்தி வைத்திருந்த மூன்று டாங்கிகளில் இரண்டையும் இழக்க வேண்டியிருந்தது.

அன்று ஏற்பட்ட கடும் சமர் காலை 8.30 ல் இருந்து12.30 மணி வரையிலுமேஇடம்பெற்றது. பின்னர் புலிகள் தமது கடும் தாக்குதலை நிறுத்திக் கொண்டனர். இதைத்தொடர்ந்து அன்றும், அடுத்தநாளும் புலோப்பளைப் பகுதியில் தரித்த இராணுவம் இரு நாட்களின்பின் அல்லிப்பளை, கிளாலி வரையும் வந்தது. ஆனால், புலிகள் பெரும் எதிர்ப்பைக் காட்டாது, இராணுவத்தினரின் நகர்ச்சிக்கு வழிவிட்டனர் என்றே கூறலாம். அதாவது, இராணுவத்தினரின் விருப்பிற்கேற்ப புலிகள் போர் புரியாது தமது திட்டத்திற்கேற்ப போரை நடத்த முற்பட்டனர்.

ஆனால், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இப்போர் முறையானது, அதாவது‘ தாக்குதலும், தவிர்த்தலும்’ என்னும் போர் யுக்தியானது கடந்த ஆண்டு இடம்பெற்ற ‘ஒப்பரேசன் பலவேகய 2’ நடவடிக்கையின்போதும் பின்பற்றப்பட்ட போர்த் தந்திரோபாயத்தின் அடிஒற்றியதே ஆகும்.

அத்தோடு, இச்சமரில் விடுதலைப் புலிகளின் படையணிகள் கடந்த காலச் சமர்களில் பயன்படுத்தியதை விட கணிசமான கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளதையும் உறுதி செய்யக் கூடியதாக இருந்தது, இதில், மோட்டோர்கள், ஆர். பி.ஜி. எறிகணை செலுத்திகள், கனரக துப்பாக்கிகள் என்பன முக்கிய இடத்தைப் பெற்றன. இக்கனரக ஆயுதங்கள் இராணுவத்தினரின் முன்னணிப் படையணிகளையும் கடந்து சென்று தாக்கக் கூடியவையாக இருந்தமையே இராணுவத் தரப்பில் சேதம் அதிகரித்தமைக்கும், படை அணிகள் சிதறியமைக்கும் காரணமாகும். அதாவது தாக்குதலை வழிநடத்தி வந்த கேணல் தரத்தில் உள்ள உயர் இராணுவ அதிகாரி காயம்படும் அளவிற்கு புலிகளின் மோட்டோர் தாக்குதல்கள் இராணுவ அணிக்குள் புகுந்தன.

இந்நிலையில், ஒப்பரேசன் யாழ்தேவியின் நோக்கம், போர் முன் திட்டம் ஆகியஇரண்டும்தோற்கடிக்கப் பட்டன. அதாவது விடுதலைப் புலிகளைத் திறந்த வெளியில் சமருக்கு அழைத்து பெரும்ளவில் கொன்றொழித்தல் என்ற இராணுவத் தந்திரோபாயம் விடுதலைப் புலிகளின் போர் யுக்திகளினால் தோற்கடிக்கப்பட்டதோடு, அவர்களுக்கே பெரும் கேடு விளைவிப்பதாகவும் அமைந்தது. ‘‘இராணுவப் படை அணிகள் திறந்த வெளிப் பரப்பிற்குள் முன்னேறிச் சென்றதே படையினருக்கு ஏற்பட்ட பெரும் பாதிப்பிற்கான காரணங்களில் ஒன்றாக அமைந்தது’’ எனத் தமது தந்திரோபாயத்திற்கு தாமே பலியானதை ஓர் இராணுவ அதிகாரி பரிதாபமாக ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தது.

இதேவேளை இத்தோல்வியானது சிறிலங்கா அரசியற் தலைமைக்கும், இராணுவத் தலைமைக்கும் ஒட்டு மொத்தமாகக் கிடைத்த தோல்வியாகும். தெளிவாகக்கூறின்ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவிற்கும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவிற்குமான தனிப்பட்ட தோல்வியும் ஆகும்.

இராணுவத் தரப்பில் இராணுவத்தீர்வை மட்டுமே வற்புறுத்தும் கடும் போக்குடையவரான லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னாவின் நேரடித்தலைமையில் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட பாரிய நடவடிக்கை இதுவாகும். லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய்விமலரெட்னா ஆகியோர் கொல்லப்பட்டபின்னர் சுமார், ஒருவருடத்தின் பின் மேற்கொள்ளப்பட்ட இப்பாரிய இராணுவ நடவடிக்கை பெரும் தோல்வியில் முடிவடைந்துள்ளது. ஆகையினால் இத்தோல்வி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவின் திறமை குறித்து கேள்வியை எழுப்பும் என்பதில் சந்தேகமில்லை.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே தீர்வு என வற்புறுத்தி வரும்டி.பி. விஜேதுங்காவிற்கு இத்தோல்வி இராணுவத் தீர்வின் சுமைகளைப் புரியவைத்திருக்கும். அதாவது, இச்சமரில் அவருக்குகிடைத்தஅனுபவமானது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற கொள்கைக்கு கிடைத்ததோல்வியாகும்.

ஜெயராஜ்

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

KILLER INSTINCT

(கொலை வெறி)

(முழுநீளத்தாக்குதல் சித்திரம்)

தினசரி மாலை 4.00 மணி, 6-00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10-30 மணி,

மாலை 4-00 மணி, 6-00மணி

(இ-7352)

யாழ்நகர் சகலதுறை
வர்த்தகர்களுக்கும், ஊழியர்களுக்கும்
யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்

ஓர் முக்கிய அறிவித்தல்

இன்று 08-10-1993 வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருந்த முக்கிய கலந்துரையாடல் சகலதுறை வர்த்தகர்களினதும், ஊழியர்களினதும் நலன்கருதி நாளை 09-10-1993 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொள்வதால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகலதுறை வர்த்தகர்களும், ஊழியர்களும் தவறாது கூட்டத்தில் கலந்து கூட்டத்தை சிறப்பிக்குமாறு சங்கத்தின் சார்பில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நன்றி, வணக்கம்.

யாழ். வர்த்தகர் சங்கம்,
21, மேல்மாடி, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

(5957)

யாழ். பல்கலைக்கழகம்

4ஆம் வருட கலைப்பீட மாணவர்களின் Group Photo இன்று பி. ப. 4மணிக்கு [8-10-93, வெள்ளி] எடுக்கப்படவுள்ளதால் அனைத்து 4ஆம் வருட மாணவர்களும் தவறாது சமுகந்தரவும்.

[6242] இறுதி வருட மாணவர்கள்

யாழ். பல்கலைக் கழக

வெளிவாரிப் பட்டப்படிப்பு

கலைமாணி பகுதி I B.A Part I 12–1மணி

கலைமாணி பகுதி II B.A Part II 10–11மணி

அரசியல் விஞ்ஞானம்

விரிவுரையாளர் திரு. க. செல்வரட்ணம்
B.A. (Hons)

ஆரம்பம் 10-10-93

பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி,7566)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 07-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11124

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:
இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்றவாகன இலக்கங்கள்:
26-2668, 26 5576, 24-9609, 26-5113, 28 6546
26-7217, 28-2829, 24-5721, 24-9773.

## பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி 1992/93 கல்வியாண்டு

| | மருத்துவம் | பல் வைத்தியம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உயிரியல் விஞ். | பொறியியல் I | பொறியியல் II | பௌதிக விஞ். | முகாமைத்துவம் | வர்த்தகம் | சட்டம் | கலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 266 | 262 | 259 | 249 | 241 | 290 | 280 | 251 | 291 | 276 | 281 | 243 |
| யாழ்ப்பாணம் | 261 | 260 | 259 | 249 | 236 | 284 | 276 | 247 | 286 | 273 | 272 | 248 |
| கிளிநொச்சி | 218 | 202 | — | 210 | 196 | 215 | 213 | 197 | 268 | 255 | 232 | 239 |
| மன்னார் | 222 | 216 | 212 | 194 | 181 | 250 | 181 | — | 254 | 243 | 234 | 239 |
| முல்லைத்தீவு | 197 | 195 | 191 | 189 | 182 | 210 | 201 | — | 244 | 238 | 214 | 245 |
| வவுனியா | — | 227 | 187 | 195 | — | 232 | — | — | 256 | 252 | 250 | 214 |
| திருக்கோணமலை | 227 | 226 | 224 | 208 | 199 | 255 | 230 | 186 | 266 | 257 | 267 | 239 |
| மட்டக்களப்பு | 232 | 227 | 221 | 212 | 202 | 242 | 233 | 184 | 270 | 255 | 255 | 246 |
| அம்பாறை | 241 | 236 | 235 | 229 | 210 | 246 | 242 | 182 | 263 | 254 | 265 | 243 |

## கொலரா நோய் மூவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீண்டும் கொலரா நோயாளர்களது எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது.

கடந்த சில நாட்களாகத் தணிந்திருந்த இந்த நோய் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளது நேற்று மட்டும் மூன்று பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டு யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க) (நி)

## கலந்துரையாடல்

வலிகாமம் கிழக்கு கடற்புலிகள் பிரதேசத்தைச் சேர்ந்த சகல பந்தல் செற், ஒலி, ஒளி, ஜெனரேற்றர் உரிமையாளர்களை நாளை காலை 9. 30 மணிக்கு கடற்புலிகளின் வலிகாமம் கிழக்கு அரசியற்துறை செயலகத்தில் இடம்பெறவுள்ள முக்கிய கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## கூட்டம்

தண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று காலை 9. 00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

## உடன் சேர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பல் மூலம் தபால் பொதிகள் அனுப்பப்படவுள்ளதால் நாளை சனிக்கிழமை காலை 9·00 மணிக்கு முன்னர் யாழ். பிரதம தபாலகத்தில் வெளியூர் தபால்களைச் சேர்க்குமாறு பிரதம தபாலதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கப்பல்

டபத்தில் நடைபெற்ற அனைத்து ப. நோ. கூ. சங்கங்கத் தலைவர் பொது முகாமையாளர் கலந்துரையாடலில் ப. நோ. கூ. சங்கங்கள் மண்ணெண்ணெய் கொள்வனவு சம்பந்தமாக ஆராயப்பட்டது. ஏற்கனவே பல தடவை நடைபெற்ற தலைவர், பொது முகாமையாளர் கலந்துரையாடலின் தீர்மானத்தின்படி சங்கங்களினால் செலுத்தப்படும் பணத்திற்கு யாழ். அரச அதிபர் கப்பல் கூலியின்றி மண்ணெண்ணெய் கொள்வனவு செய்துதரும்படியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சங்கங்கள் வேண்டிய வெற்றுப்பீப்பாக்களை கொள்வனவு செய்துகொடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானம் நேற்று யாழ். அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு மேற்படி விடயம் தொடர்பாக மேலிடத்திற்கு அறிவிப்பதாக அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## கருணாநிதியின் பாதுகாப்பிற்கு கறுப்புப் பூனைப் படை

[சென்னை]

தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி தனது மகனான மு. க. ஸ்ராலினைத் தன்னுடைய வாரிசாக்கப் பார்க்கிறார் என திரு. வை. கோபாலசாமி கருணாநிதிமீது பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை கட்சிஒழுங்கை திரு. கோபாலசாமிமீறுகிறார் என கருணாநிதியும், ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கு உண்மையிலேயே ஆபத்து ஏற்பட்டுவிட்டதாகவும் அவரைக் காக்க மாநிலஅரசு செய்துள்ள ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை எனவும் நடுவண் உள்துறை அமைச்சகம் கருதுகிறது.

இது தொடர்பாக நடுவண் அரசு தமிழக அரசிற்கு எழுதியபின் கருணாநிதியின் இல்லத்தில் ஆயுதம் ஏந்திய காவலர்கள் பணியிலமர்த்தப்பட்டார்கள். ஒரு தலைமைக் காவலர் நான்கு காவலர்கள் இவரது இல்லத்தில் பாதுகாப்புகடமையிலீடுபட்டுள்ளனர்.

கருணாநிதிக்கு குண்டு துளைக்காத மோட்டார் வண்டி ஒன்றும் ஏ.கே. 47 ரக துப்பாக்கி ஏந்திய கறுப்புப் பூனைப் படையும் பாதுகாப்பு அளிக்கலாமா என நடுவண் அரசு ஆலோசித்து வருகிறது.

## கடற்படை

கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இத் தாக்குதலை நடாத்தினர்.

முதற்தடவை சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள் மீதுதாக்குதலை நடத்தி படகுகளையும் வலைகளையும் சேதப்படுத்திக் கொண்டிருந்த வேளைகரையிலிருந்து எதிர்த் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இதனைஅடுத்துபின்வாங்கிய கடற்படையினர் மேலும் சில படகுகளின் உதவியுடன் அவ்விடத்திற்கு வந்து முன்னர் தாக்குதலுக்கு உள்ளாகி கரையில் நின்ற மீனவரின் படகுகளையும் வலைகளையும் சேதப்படுத்தி தீமூட்டினர்.

இதனை அடுத்து பலத்த எதிர்த்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனை அடுத்து படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

மேற்படி சம்பவத்தில் கடற்கரை வீதி பருத்தித்துறையைச் சேர்ந்த தங்கராசா உதயராசா (40), 2 ஆம் குறுக்குத் தெரு பருத்தித்துறையைச் சேர்ந்த அழகன் சின்னவர் ஆகியோரே பலியானவர்களாவர்.

ராமசாமி (வயது 50), பாலசுந்தரம் (39), தேவராசா (28) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் தங்கராசா ரவீந்திரனுக்கு என்ன நடந்து என்பது பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

கடற்படையினர் நடாத்திய தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த மீனவர்களது படகுகள், வலைகள் மற்றும் வெளி இணைப்பு இயந்திரங்கள் ஆகியவை தமிழீழ காவல் துறையினரால் மீட்கப்பட்டன. (86)

## கருணாநிதி

ஆதரவை நாம் வேண்டிநிற்பதால் இந்த அணிசேராக் கொள்கையை நாம் கடைப்பிடித்து வருகிறோம். ஆயினும், இந்திய அரசியல் இயக்கங்கள் சில, தமது சொந்த இலாபங்களுக்காக எமது இயக்கம் மீது வீண் பழிகளைச் சுமத்தி ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தி வருகின்றன. இந்த வரிசையில் இப்பொழுது கலைஞர் கருணாநிதி அவர்களும் சேர்ந்து கொண்டது எமக்கு வேதனையைத் தருகிறது.

இன்று தமிழீழ மக்கள் பெரும்நெருக்கடியை சந்தித்து நிற்கிறார்கள். எமது தேசத்தின் எல்லைகளில் எதிரியின் சேனைகள் குவிக்கப்பட்டு வருகின்றன. யாழ். குடாநாடு மீது பெரியதொரு படையெடுப்பை நடத்த எதிரி ஆயத்தங்களை செய்து வருகின்றான். சாவும், அழிவுமாக எதிரியின் அனர்த்தங்களால் எமது மக்கள் பெரும் துன்பப் பளுவை சுமந்து நிற்கிறார்கள். எமது மண்ணையும், மக்களையும் பாதுகாக்கும் பணியில் எமது விடுதலைப் போராளிகள் அளப்பரிய தியாகங்களைப் புரிந்து வருகிறார்கள். இந்த இக்கட்டான நேரத்தில் ஈழத் தமிழினம் பெரியதொரு இன அழிவை சந்தித்து நிற்கும் ஆபத்தான வேளையில் இங்குள்ள எமது மக்களுக்காக குரல் கொடுக்க கடமைப்பட்டுள்ள தமிழகத் தலைவர்கள் எமது இயக்கத்தையும் போராட்டத்தையும் இழிவு படுத்த முயல்வது எமக்கு ஆழ்ந்த வேதனையைத் தருகிறது. இந்த முயற்சி தமிழ் நாட்டு மக்களைக் குழப்பி திசை திருப்பும் கபட நோக்கத்தைக் கொண்டது. இது தமிழீழ மக்களுக்கு இழைக்கப்படும் பெரியதொரு அநீதியாகவே நாம் கருதுகிறோம்.

இலங்கைத்தீவில் தமிழர் தாயகம் எரிந்து கொண்டிருக்கிறது. இன அழிப்பு நடந்து கொண்டிருக்கிறது. எமது மக்களின் அவலத்தைப் புரியாது அவர்களது அழிவில் அரசியல் இலாபம்தேட முயல்வது மிகவும் கேவலமான இனப்பற்றற்ற செயலாகும். இனியாவது தமிழக அரசியல் வாதிகள் பொறுப்புணர்வுடன் ஒடுக்கப்படும் எமது மக்களின் உணர்வுகளை மதித்து எமது சுதந்திர இயக்கத்திற்கு களங்கம் ஏற்படாதவாறு செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.